விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்




சங்கு 24
ஒலி 160 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை (28.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## புதிய பாராளுமன்ற கட்டடம் மோடியால் இன்று திறப்பு

### செங்கோலை ஒப்படைத்த திருவாவடுதுறை ஆதீனம்



(புதுடில்லி)

புதுடில்லியில் கட்டப்பட்டுள்ள புதிய பாராளுமன்றக் கட்டடம்இன்று பாரதப் பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்படவுள்ளது. 19

## சட்டவிரோத குடிப்பெயர்வை தடுக்க ஒத்துழையுங்கள்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் பிரித்தானிய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் பிரித்தானியாவுக்கு குடிபெயரும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கைக்கான பிரித் 19

## யாழில் 2 ஆயிரம் ஏக்கர் காணியை

# வனவளத் திணைக்களம்

# கையகப்படுத்தத் திட்டம்

### வர்த்தமானி அறிவித்தலை வெளியிட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக மேலும் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிக்ளாக அறிவிக்கும் முயற்சிகளை வனவளத் திணைக்களம் முன்னெடுத்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவும் ஏற்பாடாகியுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

ஐ.பி.எல் இறுதிப் போட்டி

## சென்னை - குஜராத் இன்று பலப்பரீட்சை



4ம் பக்கம் பார்க்க

## அதிகரித்துள்ள வெப்பநிலை

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

வளிமண்டலவியல் திணைக்களத்தால் 14 மாவட்டங்களுக்கு வெப்பநிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற் 19

## கிணற்றுக்குள் விழுந்த 6 வயது சிறுமி பலி

### மிருசுவிலில் சம்பவம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவிலில் பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் விழுந்து ஆறு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சில மணிநேரமாக சிறுமியைக் காணாத நிலையில் உறவினர்கள் இணைந்து 19

## லான்ட்மாஸ்டரின் சில்லுக்குள் அகப்பட்ட

### 4 வயது சிறுமி உயிரிழப்பு புதுக்குடியிருப்பில் சம்பவம்



(முல்லைத்தீவு)

லான்ட்மாஸ்டரின் சில்லுக்குள் அகப்பட்ட 4 வயதுச் சிறுதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு 19

## கப் ரக வாகனம் மோதி குடும்பஸ்தர் மரணம்

### வீதியில் புல் செருக்கியவேளை அச்சுவேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வல்லை வீதியில் கப் ரக வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு முன்னால் உள்ள வீதியில் புல் செருக்கிக் கொண்டு இருந்தவேளை வீதியால் வந்த கப் ரக வாகனம் மோதி விபத்து 19

## கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை ஒக்டோபருக்குள் நிறைவடையும்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு தொடர்பில், கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் நிறைவுசெய்ய விரும்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், அந்த நாட்டின் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம், பாதீட்டை முன்வைப்பதற்கு முன்னர் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்திற்குள், கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்ய 19

வைத்தியசாலையில் மரணமடைந்த

## சகோதரியை பார்வையிட்டு வந்தவர் விபத்தில் உயிரிழப்பு

### சாவகச்சேரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் உயிரிழந்த தனது சகோதரியை பார்வையிட்டு விட்டு சென்றவர் வைத்தியசாலையில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வயோதிபப் பெண் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

தோற்றம்
1947
.
09
.
19



மறைவு
2023
.
05
.
26

## இராமு நவரட்ணம் (இத்தாலி நவா)

அராலியைப் பிறப்பிடமாகவும் நாப்போலி இத்தாலியில் வசித்தவரும் தற்போது முடவேம்படி சுன்னாகத்தில் வசித்தவருமாகிய இராமு நவரட்ணம் அவர்கள் நேற்று முன்தினம் (26.05.2023) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தியின் அன்புக் கணவரும் நல்லமுத்து காலஞ்சென்ற இராசமணி, பொன்னுத்துரை, காலஞ்சென்ற நடராசா மற்றும் சுப்பிரமணியம், பொன்ராசா, இராசையா, பொன்மலர், தங்கவேலு (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோராணி, காலஞ்சென்றவர்களான சாந்தி, மனோராஜன் மற்றும் சுமதி(சுவிஸ்), இரவிச்சந்திரன், சுதன், கவிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.283/46, முடவேம்படி,
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.

(15748)

தகவல் -
மனைவி வசந்தி
T.P- 077 117 8225

# ஓராம் ஆண்டு நினைவு நாள் அழைப்பு



கடந்த (08.06.2022) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த
எமது குலவிளக்கு

## அமரர் பிரபாகரன் பிறேமலதா

அவர்களின் 01 ஆம் ஆண்டு சிரார்த்த தினம் இன்று 2023.05.28 ஞாயிற்றுக்கிழமை அமரரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
ஆழியவளை.
077 543 4424, 077 408 0712

(15764)

குடும்பத்தினர்

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04
-
02
-
1960

உதிர்வு
23
-
05
-
2018



மலர்வு
25
-
12
-
1986

அமரர்
## மயில்வாகனம் ஜெகநாதன்

அமரர்
## ஜெகநாதன் சஞ்சீவன்

திதி - 28.05.2023

புன்னகை பூக்கள் இரண்டு உதிர்ந்து
ஐந்தாண்டு ஆனதுவோ – அப்பா
எம் வார்த்தைகள் மௌனித்து நீள்கிறது...
உம் நினைவுகளை சுமந்து வாழ்கின்றோம்
அண்ணா, நீ கண்முன்னே வாழ்ந்த காலம்
இன்றும் நிழலாட – காலனவன்
வந்தானோ எமைவிடுத்து உமை அழைக்க...

உங்கள் பொன்முகம் காணவே – தினம் தினம்
பூசைகள் செய்தே நின்றோம்
நன்மதி ஒளியை போலவே
நமதில்லம் நோக்கி வாரீர்
உம் கடன் செய்தே நின்றோம்
நிமலனடி சென்றே வாழ்வீர்.

(15736)

கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
☎-077 533 7406

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானகம் போன் சிற்றி
இல : 64/121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[ சம்பத் வங்கி முன்பாக ]

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் தொடரும் கைது வேட்டைகள்

## சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச்சட்டத்தை கைவிடுவதாக தொடர்ச்சியாக உறுதியளித்துள்ள இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்துவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**




முகமட் அஸ்வர், முகமட் அனாஸ், முகமட் ஹபீர் ஜபீர், முகமட் சித்தீக் இராவுத்தர் மரீக்கார் ஆகிய நால்வரும் கடந்த மே மாதம் 18ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் காலத்திற்கு காலம் ஏதேனும் நியாயமான அல்லது உரிய செயல்முறை பாதுகாப்பின்றி சிறுபான்மையினத்தவர்களை இலக்குவைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. எனவும் சித்திரவதைகள் போன்றவற்றின் மூலம் பலவந்தமாக வாக்குமூலம் பெறப்படுவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள வேளை இந்த விடயங்கள் கவலையளிப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை உடனடியாகவும் பாரபட்சமின்றியும் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளிற்கு இணங்க முன்னெடுக்கவேண்டும் எனவும் மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (4)

## விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசார் பணியாளர் பற்றாக்குறை தொடர்பில் பல்கலைக் கழகங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோள்களின் அடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் பிரதமரின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக் கடிதங்களுக்கு அமைவாக பிரதமரின் செயலாளர் தலைமையில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கேற்ப பல்கலைக்ககழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் காணப்படும் விரிவுரையாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (4)

## துப்பாக்கிச் சூடு குடும்பஸ்தர் பலி

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யபட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கேகாலை பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

47 வயதுடைய வசந்த பண்டார என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

உறவினரின் வீட்டுக்கு இவர் சென்ற போதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். எனினும், இவருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற மனைவிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

ஓட்டோ ஒன்றில் வந்தவர்களே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்த உயிரிழந்தவரின் மனைவி தெரிவித்தார்.

உயிரிழந்த குடும்பஸ்தர் போதைப்பொருள் விற்பனை வழக்கொன்றில் சிறைத்தண்டனையை அனுபவித்துவிட்டு அண்மையில்தான் விடுதலையானார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (4)

# விடைத்தாள் மதிப்பீடு மீண்டும் நெருக்கடியில்

(கொழும்பு)

உயர்தர விடைத்தாள் மதிப் பீடுகளை திட்டமிட்டபடி நடத் துவதில் பரீட்சை திணைக் களம் கடும் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது.

தற்போதைய நிதி நெருக்கடி அதற்குக் காரணம். பத்தொன் பதாயிரம் ஆசிரியர்கள் மதிப் பீட்டுக்காகக் கோரிய முன்ப ணத்தை இதுவரை திணைக் களத்தினால் செலுத்த முடிய வில்லை.

ஒரு பகுதியினருக்கு மட்டுமே முன்பணம் செலுத்த முடிந்தது. முன்பணம்பெறாதவர்கள் நேற்று முன்தினம் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இருந்து விலகினர்.

முற்பணம் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் இவர்கள் மீண்டும் மதிப்பீடுகளுக்காக இணைந் துள்ளனர்.

ஆனால், முன்பணம் வழ ங்க, துறையிடம் பணம் இல்லை என, குறித்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அறுபத்து மூன்று பாடங்க ளுக்கான மதிப்பெண் நடை முறைகள் தயாரிக் கப்பட்டு பன்னிரெண்டு பாடங்களின் மதிப் பீடுகள் நிறைவடைந்துள்ள தாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அண்மையில் பாரா ளுமன்றத்தில் அறிவித் திருந்த போதிலும் இதுவரை அனைத்து பாடங்களுக்கும் மதிப்பெண் நடைமுறைகள் தயாரிக்கப் படவில்லை அல்லது திருத்தப் பணிகள் ஆரம்பிக் கப்பட வில்லை என வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அடுத்தவாரம் புதிய தலைவர்

(கொழும்பு)

அடுத்த வாரத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தலைவரை நியமிக்கவுள்ளதாக ஆணைக் குழுவின் உறுப்பினர் டக்ளஸ் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தற்போது பொதுப்பயன் பாடுகள் ஆணைக்குழுவில், இரண்டு உறுப்பினர்களின் வெற்றிடங்கள் உள்ளதாகவும் எனவே அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர் உறுப் பினர்களில் ஒருவர் தலைவராக நியமிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் உறுப்பி னர் டக்ளஸ் நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 30ஆம் திகதிக் குள் பூர்த்தி செய்யப்படவேண் டிய ஆவணங்கள் உள்ளதால் இம்மாதத்திற்குள் இந்த நியமனங்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவவர், நிதிக்கு பொறுப்பான அமைச்சரால் நிய மிக்கப்படுகின்றமையும் குறிப் பிடத்தக்கது. (4)


## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் கொமர்ஷல் வங்கியில் இருந்து 300 m தூரத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட 2 பரப்பு காணியில் 3000 சதுர அடி அளவில் 7 அறைகள் (2 AC Room) 3 வரவேற்பறை, 3 குளியலறை, சமையலறையுடன் தளபாடங்கள் தொலைக்காட்சி, இணைய வசதி, மற்றும் 24 மணி நேர கண்காணிப்புடன் கமாரக்கள் போன்ற சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

பார்வையிடும் நேரம் மாலை 4.00-7.00 மணிவரை

தொடர்புகளுக்கு - உரிமையாளர்

077 102 2763 (15759)

## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய சாமான்கள், சில்வர் சாமான்கள் பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், கிளினர், திரவியங்கள், கான்ட்வோஸ், கொம்போட், வாசனை திரவியங்கள், மாபிள் கிளினர், றூம் ஸ்பிறே, தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெயிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், பெர்ஸ் வகைகள், அன்பளிப்பு பொருட்கள் மணிக்கூட்டு வகைகள்

**இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.**

என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(15738)

**சரவணபவன் பான்சி ஹவுஸ்**

26/1 ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.

உரிமையாளர்

தே.கலைத்தாசன் (கரன்) 021 315 5900


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார் சைக்கிள் தேவை

நல்ல நிலையிலுள்ள வெகோ (Wego) அல்லது பிளசர் (Pleasure) மோட்டார் சைக்கிள் தேவை.

தொடர்பு

**077 315 1326**


# ஐ.பி.எல் இறுதிப்போட்டி இன்று சென்னை- குஜராத் பலப்பரீட்சை

விறுவிறுப்பாக நடைபெ ற்று வந்த 16 ஆவது ஐ.பி.எல் தொடர் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இறுதிப்போட்டிக் கான குவாலிப்யர் 2 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், மும்பை அணியை 62 ரன்கள் வித் தியாசத்தில் வீழ்த்தி குஜராத் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. ஏற்கனவே, பிளே ஆப் சுற்றில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு நுழைந்த சென்னையை களத்தில் சந்திக்க குஜராத் அணியும் குவாலிஃபயர் 2 வெற்றியின் மூலம் தயாராகவுள்ளது.



இதன் மூலம் இன்று நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை எதிர் கொள்ள உள்ளது. இறுதிப்போட்டியில் வெல்லும் அணி ஐ.பி.எல் கிண் ணத்தைக் கைப் பற்றும். சென்னை சுப்பர் கிங்ஸ் 4 முறையும் குஜராத்டைட்டன்ஸ் ஒரு முறையும்கிண்ணத்தை வென்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

## மரண அறிவித்தல்

### சுப்பையா குலசேகரம்



பிறப்பு 1942.11.04 — இறப்பு 2023.05.27

வதிரி சோளன்வளவைப் பிறப்பிடமாகவும் வதிரி கமலவாசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா குலசேகரம் அவர்கள் நேற்று (2023.05.27) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பெரியபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தவனம் கமலாகரனின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, வேலாயுதம், இரத்தினம், செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் சோமசங்கர், முத்தரசியின் (ஆசிரியர் - யா/வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை) வளர்ப்புத் தந்தையும் மற்றும் கமலாகரன் கௌரிஹாசன், கமலாகரன் சந்திரகாசன், எழிலரசி (London) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரவிகிருஸ்ணா, கிருத்திக்ரோஷன், தர்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மதியம் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 412 4698 (C-5544) தகவல்:- குடும்பத்தினர்


## மணமகள் தேவை

1987.01.29 இந்து கௌரவ குடும்பம் உத்தராடம் 36 பாதம் கி.பா 28 IT பட்டம் பெற்ற UK விசா உள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (15763)

**077 704 4907**
**077 101 6371**

## காணி விற்பனைக்கு

யாழ்.கச்சேரியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் A9 வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 35 மில்லியன். விலை பேசித் தீர்மானிக்கலாம்.
- தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு (15765)

**077 805 2520, 076 263 8816**


## மரண அறிவித்தல்



### கந்தசாமி கமலநாதன்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலநாதன் அவர்கள் நேற்று (27.05.2023) அதிகாலை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான கந்தசாமி - நாகமுத்து தம்பதிகளின் இளைய மகனும் மற்றும் காலஞ்சென்றவர்களான பண்டாரி - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கந்தசாமி, சிவயோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாளன், கஜந்தன், லஜீதன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

(C-6635) தொ.பே. 077 779 5287

## மரண அறிவித்தல்

### திருமதி கோபாலன் சின்னம்மா



அண்ணாசிலையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலன் சின்னம்மா அவர்கள் 25.05.2023 வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லான் - சோதி தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கிட்டிணன் - பசுபதி தம்பதிகளின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற கிட்டிணன் கோபாலனின் பாசமிகு மனைவியும் பூரணம் (அன்பு), ஜெயரட்ணம் (வவுனிக்குளம்), விஜயரட்ணம், சிவசோதி (ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி, கொழும்பு), காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், வேலாயுதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தெய்வேந்திரம், தெய்வராஜா (ஜேர்மனி), தெய்வநாதன் (ஜேர்மனி), தெய்வரதி (ஆசிரியர் - மணியகாரன்தோட்டம் அ.த.க. பாடசாலை), தெய்வலோஜினி, காலஞ்சென்றவர்களான தெய்வமலர், தெய்வரஜனி (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாக்கியம், கலாவதி (ஜேர்மனி), பத்மாவதி (ஜேர்மனி), சிவலிங்கராஜா (ஓய்வுநிலை ஆசிரியர்), பிறேமதாசன் (மணியம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசம்மா, தவமணி (ஓய்வுநிலை கணக்காளர் - உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), யோகம்மா, இராஜேந்திரம், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, புஸ்பலீலா (கலா), தர்மரட்ணம் (ஓய்வுநிலைக் கணக்காளர் - பிரதேச செயலகம், கரவெட்டி), சிவக்கொழுந்து (சிரேஷ்ட உத்தியோகத்தர் மத்திய வங்கி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பூரணம் (பூமணி), அருளம்மா, காலஞ்சென்றவர்களான கிட்டிண்ன், நல்லதம்பி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் சுகுமார், சுரேஸ்குமார், சகானா (ஜேர்மனி), அனுஷியா (ஜேர்மனி), ஆகாஷ் (ஜேர்மனி), கஜன் (ஜேர்மனி), ஸ்ரீகாந்த் (ஜேர் மனி), எப்சிபா (ஜேர்மனி), கானரூபி (Software Engineer, Colombo), கானப்பிரியன் (ஆசிரியர் - நீர்கொழும்பு விஜயரட்ண மகா வித்தியாலயம்), காயத்திரி (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), பிருந்தாயினி, பிருந்தாவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அல்பாசுமியின் (சுவிஸ்) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- செ.சிவலிங்கராஜா
(மருமகன்) 077 931 1234

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எவரெஸ்ட் சிகரத்திலும் அனுஷ்டிப்பு



(எவரெஸ்ட்)

கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பல தமிழ் மக்கள் கொல்லப்பட்டு இந்த ஆண்டுடன் 14 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், உலக நாடுகள் பலவற்றிலும் குறிப்பாக, தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் இந்த முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டன.

அந்த வகையில், இலங்கையில் பிறந்து இங்கிலாந்தில் புலம்பெயர்ந்து வாழும் விவேகானந்தன் துஷியந்தன் என்ற 46 வயதான நபர் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவேந்தலை 8849 மீற்றர் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் கடந்த மே மாதம் 18 ஆம் திகதி அனுஷ்டித்துள்ளார். (4)

# ரணில் அரசாங்கத்தில் இருந்து விரைவில் பலர் எதிரணியில்

## ஐ.ம.ச எம்.பி தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து பல உறுப்பினர்கள் விரைவில் எதிர்க்கட்சிக்கு வரப் போகின்றார்கள் என்பது உண்மை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கட்சித் தாவல்கள் தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் செல்லவுள்ள உறுப்பினர்கள் தொடர்பிலும் ஹர்ஷன ராஜகருணாவிடம் ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசாங்கத்துடன் எமது கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் இணைந்துள்ளனர். அரசாங்கத்தில் இருந்த 50 பேர் எதிர்க்கட்சியின் பக்கம் அமர்ந்துள்ளார்கள். எங்களது உறுப்பினர்கள் நால்வர் அரசாங்கம் பக்கம் சென்றுள்ளார்கள். இருப்பினும், கட்சி மாறிய உறுப்பினர்களின் அடிப்படையில் பார்க்கும் போது அரசாங்கம் தான் வீழ்ச்சி யடைந்திருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்குக் பாடுபடுகிறார். எமது கட்சியில் உள்ளவர்கள் அரசாங்கத்துடன் இணைவதை விட, அரசாங்கத்தில் இருந்து பலர் விரைவில் எதிர்க்கட்சிக்கு வரப்போகின்றார்கள் என்பது தான் உண்மை. ஆனால், இது பற்றி அல்லது எதிர்க்கட்சிக்கு ஏற்கனவே வந்துள்ள 50 பேர் பற்றியோ அரசாங்கம் பேசுவதில்லை.

எமது கட்சியில் இருந்து அரசாங்கம் பக்கம் சென்ற நால்வர் பற்றியே தற்போது பேசப்படுகின்றது எனத் தெரிவித்தார். (4)

# வெளிநாட்டில் அடைத்து வைத்து இலங்கைப் பெண்கள் சித்திரவதை

## வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழிலுக்காகச் செல்லும் இலங்கை பெண்களை அடைத்து வைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்படும் தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

செல்ல கதிர்காமம், கொஹோம்பதிகான பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சவுதி அரேபியாவுக்கு வேலைக்குச் சென்று காணாமல் போனதாக குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அவர் அனுப்பிய காணொளி ஒன்று ஊடகங்களுக்கு வெளியாகியுள்ளது.

"ஒரு அறையில் சுமார் 20 முதல் 30 பேர் வரையிலானோரை அடைத்து வைத்துள்ளனர். அவர்களுக்கு சாப்பாடு கூட வழங்கப்படுவதில்லை.

தினமும் அவர்களை அழைத்துச் சென்று வெவ்வேறு இடங்களில் விற்பனை செய்து 6 முதல் 7 மணி நேரம் வேலை செய்ய வைக்கிறார்கள். பணம் வழங்குவதில்லை. முகவரிடம் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இலங்கை பெண்களை வரிசையில் வைத்து விற்பனை செய்கின்றார்கள். 19,500 ரூபாய்க்கு இரண்டாம் நிலை பெண்கள் எனவும் 30,000 ரூபாய்க்கு புதியவர்கள் எனவும் மதிப்பிடுகிறார்கள்.

"தயவுசெய்து ஏதாவது செய்யுங்கள்" என அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4)

# 630 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்பு

புத்தளம் கற்பிட்டி பகுதியிலிருந்து பீடி இலைகளை வானில் கடத்திச் செல்வதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வானை நிறுத்திவிட்டு பீடி இலைகளை கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இதன்போது வானில் மறைத்து வைத்திருந்த 630 கிலோ கிராம் பீடி இலைகள் கற்பிட்டி பாலக்குடா பகுதியில் நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப்பட்டதாகவும் குறித்த பீடி இலைகள் சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து படகு மூலம்கொண்டுவந்திருக்கலாமென தாம் சந்தேகிப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகளுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வானையும் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (4)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி வசந்தா –ஸ்ரீ ஈஸ்வரன்
அவர்களின் பாசமிகு கணவர்

**அமரர் மாணிக்கம்- ஸ்ரீ ஈஸ்வரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13756)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை, புத்தூர்.

# இராசிபலன்

28.05.2023
வைகாசி 14, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி முற்பகல் 8.35 மணிவரை

பூரம் பின்னிரவு 1.01 மணிவரை
சுபநேரம் -8.52-10.22 மணிவரை
இராகுகாலம்-4.22-5.52 மணிவரை

சந்திராஷ்டமம்-
திருவோணம், அவிட்டம்.

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறைய லாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.




பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.




அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மனச் சஞ்சலங்கள் சற்று கூடலாம்.




வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

நினைத்தது ஒன்று பிடித்தது ஒன்று கிடைத்தது ஒன்று இது தான் பலரது வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் உயிலங்குளத்தில் விகாரை அமைக்கப்படமாட்டாது

## இராணுவத்தினர் தெரிவிப்பு

(மன்னார்)

**மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதிய பௌத்த விகாரை நிர்மாணிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியான நிலையில் அந்த பணிகளை கைவிடுவதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் சிறிலங்கா இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவு பொறுப்பதிகாரி இதனை கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் தையிட்டி உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தனியார் காணியில் விகாரை நிர்மாணிக்கப்பட்டமைக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே விகாரை அமைப்பதற்கான பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவத்தின் 542 ஆவது படைப்பிரிவு பொறுப்பதிகாரி தன்னிடம் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஊடகம் ஒன்றிக்கு தெரிவித்தார்.

விகாரை அமைக்கப்படவுள்ளதாக கூறப்பட்ட இடத்தை பேரூந்து தரிப்பிடமாக மாற்ற இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். (4)

# மன்னாரில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக டெங்கு பரவல் அபாயம் அதிகரித்துவரும் நிலையில் டெங்கு பரவல் அதிகமாக இனம்காணப்பட்ட பகுதிகளில் விசேட வீட்டு தரிசிப்பு மற்று சிரமதான செயற்பாடு நிகழ்வு இடம் பெற்றது.

மன்னார் பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மன்னார் பொலிஸார் மற்றும் கடற் படையினரின் ஒத்துழைப்புடன் உப்புக்"குளம் வடக்கு உப்புக் குளம் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள வீடுகள் முழுமையாக நேற்று பரிசோதிக்கப்பட்டதுடன் டெங்கு பரவல் தொடர்பில் அக்கறையீனமாக காணப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற் கொள்ளப்பட்டது. (4-285)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி பொங்கல் உற்சவம்

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தினை முன்னிட்டு பொங்கல் விழா ஏற்பாடு தொடர்பான இரண்டாவது முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு.க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

வற்றாப்பாளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவமானது 22 ஆம் திகதி பாக்குத்தெண்டலுடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் 29 ஆம் திகதி தீர்த்தமும், ஜூன் மாதம் 5 ஆம் திகதி வருடாந்த பொங்கல் உற்சவமும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் ஏற்பாடுகள் தொடர்பில் ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய உற்சபத்திற்கு வருடா வருடம் உதவிடும் ஏனைய திணைக்களங்களுக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ஆலய உற்சவ காலத்திற்கு தேவையான ஆலய வளாகத்தை சூழவுள்ள வீதிகள் புனரமைப்பு, ஆலய வளாக தூய்மைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களோடு ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்களுக்காக சுகாதாரம், குடிநீர், போக்குவரத்து வசதி மின்சாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அதில் உள்ள முன்னேற்றம், குறைபாடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது

இறுதியாக மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி பொங்கல் உற்சவம் தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலயத்திற்கு ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான பத்தர்கள் வருகைதருவார்கள் என எதிர்பாத்துள்ளதாகவும் அவர்களுக்கான போக்குவரத்து, குடிநீர், மலசலகூட வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (4)

# வவுனியாவில் பாவனைக்கு உதவாத ஒரு தொகை அரிசி மீட்பு

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் கிராம அலுவலகத்தில் மக்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த அரிசி பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதாக தெரிவித்து குறித்த அரிசி களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த கட்டிடம் சுகாதார பிரிவினரினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்ப ங்களுக்கு 10கிலோ அரிசிப்பை விகிதம் வழங்குவதற்காக கூமாங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்கு ஒப்பந்ததாரரான வவு னியாவிலுள்ள பிரபல அரிசி ஆலையினால் நேற்று முன் தினம் காலை 4860 கிலோ அரிசி இறக்கப்பட்டது.

குறித்த அரிசிப் பைகள் மக்களுக்கு அன்றைய தினமே பகிர்ந்தளிப்பட்டப்பட்டதுடன் அவை பழுதடைந்த நிலையில் காணப்பட்டத்தினையடுத்து பொதுமக்கள் சுகாதார பிரிவினருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

கூமாங்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு வருகை மேற்கொண்ட சுகாதார பிரிவினர் குறித்த அரிசியினை பரிசோதனைக்குட்படுத்தியதுடன் அவை பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதினை உறுதிப்படுத்தியதுடன் அலுவலகத்தின் களஞ்சியசாலையினை சீல் வைத்தனர். இவ்விடயம் தொடர்பில் குறித்த கிராம சேவையாளரிடம் வினாவிய போது.

மக்களுக்கு அரிசி வழங்குவதற்க்காக குறித்த அரிசி மூடைகள் அரசாங்கத்தினால் ஒப்பந்தம் வழங்கப்பட்ட தனியார் அரிசி ஆலையினால் காலையே எமக்கு கிடைப் பெற்றது. அரிசி கிடைக்கப்பெற்று சில மணித்தியாலயங்கள லேயே மக்களுக்கு அரிசியினை பகிர்ந்த ளித்திருந்தோம் ஆனால் அவை பாவனைக்கு ஒவ்வாத நிலையில் காணப் படுவதாக மக்கள் சுகாதர பிரிவினருக்கு தகவல் வழங்கியிருந்தமையுடன் சுகாதார பிரிவினர் களஞ்சிய சாலையினை சீல் வைத்திருந்தனர். மேலும் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரிசியினை மீளப்பெறும் நடவடிக்கையினை கிராம அபிவிருத்தி சங்கத்தினர் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தார். (4)



முல்லைத்தீவு முத்தையன்கட்டு அ.த.க பாடசாலை பெண்கள் உதைபந்தாட்ட துறையை ஊக்குவிப்பதற்காகவும், வடமாகாண போட்டியில் 3ஆம் இடம் பெற்றமைக்காகவும் பாடசாலை அணிக்கான உதைபந்தாட்ட காலணிகள் மற்றும் காலுறைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்: சதீஸ்)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 260 | 250 | 280 |
| தக்காளி | 320 | 400 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 |
| கோவா | 400 | 400 | 450 |
| கரட் | 260 | 360 | 400 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 160 | 160 | -- |
| வாழைக்காய் | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 140 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 400 | 400 | 350 |
| லீக்ஸ் | 360 | 360 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 280 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 800 |
| போஞ்சி | 550 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 500 |
| கீரை - 1 பிடி | 140 | 140 | 150 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 90 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 |
| வெங்காயப்பூ | 500 | 650 | -- |
| முள்ளங்கி | 80 | 200 | -- |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 |
| வல்லாரை | 40 | 40 | 50 |
| ஈரப்பலா | 140 | 200 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 399
Viber 076 636 3378



# கனடா - இலங்கை ராஜீய மோதல்கள் மோசமான பாதையை நோக்கி செல்கிறதா?

**கனடா பாராளுமன்றத்தில் அதன் எம்.பிக்களால் நிறைவேற்றப்பட்ட தமிழர் இனப்படுகொலை தினம் கடைப்பிடிப்பு (மே-18) முன்மொழிவு தொடர்பான அறிவிப்பை கனடா பிரதமர் ஜெஸ்டீன் ட்ரூடோ வெளியிட்ட விவகாரத்தில் தனது கடுமையான எதிர்ப்பை இலங்கை தெரிவித்துள்ளது. இது தற்போது அந்த இரு நாடுகளுக்கும் இடையில் ராஜீய அளவிலான மோதலாக உருப்பெற்றுள்ளது.**

கனடா பிரதமர் தமிழர் இனப்படுகொலை தினமாக மே- 18ஆம் திகதி கடைப்பிடிக்கப் படும் என்ற அறிவிப்பை மே 23ஆம் திகதி வெளியிட்ட பிறகு, இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, இலங்கைக்கான கனடா தூதுவரை நேரில் அழைத்து, கனடா அரசின் அறிவிப்பை முழுமையாக நிராகரிப்பதாகக் கூறினார்.

**ட்ரூடோவின் பேச்சு ஏன் சர்ச்சையானது?**

ஜஸ்டின் ட்ரூடோ இது பற்றி தமது நாட்டு பாராளுமன்றத்தில் பேசுகையில், 14 வருடங்களுக்கு முன்பு நிறைவு பெற்ற இலங்கையின் சிவில் யுத்தத்தின் கடைசி நாட்களில் முள்ளிவாய்க்காலில் நடந்த படுகொலை உள்ளிட்ட சம்பவங்களில் ஆயிரக் கணக்கான தமிழ் மக்களின்



உயிர்கள் காவு கொடுக்கப் பட்டதாக தெரிவித்திருந்தார்.

"இலங்கையில் 14 வருடங்களுக்கு முன்னர் முடிவடைந்த ஆயுதப் போராட்டத்தில் நடந்த உயிரிழப்புக்களை நாம் இன்று நினைவுகூருகிறோம். முள்ளிவாய்க்காலில் படுகொலை உள்ளிட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது உயிர்களை இழந்ததுடன், பலர் இன்னமும் காணாமல் போயுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் அல்லது இடம் பெயர்ந்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரை பாதுகாத்துக் கொண்டவர்கள் மற்றும் அவர்களின் அன்புக் குரியவர்களுடன் இணைந்து இந்த நாளை நாம் நினைவு கூருகிறோம்."

"2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் பிரேரணையொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு நாம், எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்ததுடன், நாட்டின் மனித உரிமை, பொருளாதாரம் மற்றும் அரசியல் சர்ச்சைக்கு தீர்வொன்றை பெற்றுக் கொடுக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரினோம்."

"எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை பாதுகாத்துக் கொள்வதற்காக, இலங்கைக்குள் சமய சுதந்திரம், நம்பிக்கை, பன்மைத்துவ சுதந்திரம் ஆகியவற்றை கோருவதுடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையிலுள்ள ஏனைய தீர்மானங்களை நிறைவேற்றுவதில் கனடா உலகளாவிய தலைமைத்துவத்தை வழங்குகின்றது. மேலும், 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மனித உரிமை மீறலுக்கு பதிலளிக்கும் வகையில், எமது அரசாங்கம், இலங்கை அரச அதிகாரிகள் நால்வருக்கு எதிராக தடைகளை விதித்தது," என்று அவர் குறிப்பிட்டார்.

"தமிழ் - கனேடியர்கள் நம் நாட்டிற்காக செய்த மற்றும் தொடர்ந்தும் செய்து வரும் பங்களிப்புக் களை அங்கீகரிக்கும் வகையில் அனைத்து கனேடியர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். இலங்கையில் இடம்பெற்ற ஆயுதப் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் அறிந்து கொள்ளுமாறும் துன்பப்படும் அல்லது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் இணைந்து ஒற்றுமையை வெளிப்படுத்துமாறும் நான் அனைவரையும் ஊக்குவிக்கிறேன்." என கனடா பிரதமர் தெரிவித்தார்.

**அரசியல் தேவைக்கான அறிவிப்பு**

"இலங்கையில் இடம்பெற்ற சிவில் போரின் போது, இனப்படுகொலை இடம்பெற்றதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவினால் வெளியிடப்பட்ட கருத்தானது, அரசியல் சார்பு கொண்ட சர்ச்சைக்குரிய கருத்து என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தானது கனடாவின் உள்ளக அரசியல் தேவையை கருத்திற் கொண்டு வெளியிடப்பட்ட கருத்து என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளதாக, வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் மூன்று தசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்கு மத்தியில் இடம்பெற்றதாக கூறப்படும் இனப்படுகொலை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள இவ்வாறான அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை இலங்கை நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த "இனப்படுகொலை" இலங்கையினால் நடத்தப்பட் டது என ஒருதலைபட்சமாக முன்வைக்கப்படும் போலிக் குற்றச்சாட்டுக்கள், புலம்பெயர்ந்து வாழும் பிரிவினைவாத சிறுபான்மையினரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவானது என வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகளிலுள்ள பிரிவினைவாதிகள், தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள், நிதி சேகரிப்பாளர்களுடன் விளையாடும் தலைவர்கள், அரசியல் லாபத்திற்காக கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்னர், உண்மையான வரலாற்றை தேடி பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அவர்கள் எமது இளைஞர்கள் மற்றும் குழந்தைகளைத் தொடர்ந்தும் தவறான வழிக்கு அழைத்துச் செல்கின்றனர் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ, தமிழ் மக்கள் தொடர்பில் அபூர்வமான அனுதாபம் கொள்ளவில்லை என்பதுடன், கனடா பாராளுமன்றத்தில் 28 ஆசனங்களையும் வெற்றி கொள்ள கனடாவில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகள் அடிப்படையாகக் கொண்டுள்ளமையினால், அந்த வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக முதலைக் கண்ணீர் வடிப்பதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி உதயகம் மன்பில தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதம் 21 ஆம் திகதியை இனப்படுகொலை தினமாக பிரகடனப்படுத்துமாறு கனேடிய ஆதிவாசிகள் யோசனையொன்றை முன்வைத்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

"ஆதிவாசிகளுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் கனடா வரலாற்று முழுவதும் மீறப்பட்டுள்ளன. கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள், மை காய்வதற்கு முன்னரே கிழித்தெறியப்பட்டன."

"நான் இதனைக் கூறவில்லை. கால் குயின் என்கின்ற கனேடிய ஆதிவாசிகளின் தலைவரே இதனைக் கூறுகின்றார்"

"பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள கம்லூப்ஸ் ஆதிவாசிகளின் பாடசாலை வளாகத்தில் 2021 ஆம் ஆண்டு மனித புதைக் குழியொன்று கண்டுபிடிக்கப் பட்டது"

"அதில் 215 பாடசாலை மாணவர்களின் சடலங்கள் காணப்பட்டன. மூன்று வயதுக் குழந்தைகளின் சடலங்களும் காணப்பட்டன"

"ஆதிவாசிகளின் குடியிருப்பு பாடசாலை என்றால் என்ன? ஆதிவாசி குழந்தைகளை தமது கலாசாரத்திற்கு இழுத்தெடுத்து, ஆதிவாசிகளை கனடாவிலிருந்து விரட்டுவதற்காக, கனடா அரசாங்கம் லட்சக்கணக்கான ஆதிவாசி குழந்தைகளை வலுக்கட்டாயமாகக் கடத்தி, இந்தக் குடியிருப்புப் பாடசாலைக்கு அழைத்து வந்தார்கள்."

"அவர்கள் ஐரோப்பிய கலாசாரத்திற்கு இணங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த குழந்தைகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர். இந்தக் குடியிருப்புப் பாடசாலை 1870 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டது. 1996 வரை நடத்திச் செல்லப்பட்டது."

"அதனால், நடத்தப்படாத தமிழ் இனப்படுகொலைக்காக மே 18 ஆம் திகதியை ஒதுக்குவதற்குப் பதிலாக, கனடாவின் ஆதிவாசி தினமான ஜூன் 21 ஆம் திகதியை கனடா ஆதிவாசி இனப்படுகொலை தினமாக பெயரிடுமாறு நாம் யோசனையொன்றை முன்வைக்கின்றோம்" என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேட்டுக் கொண்டுள்ளார்.

— நன்றி - பி.பி.சி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். தொல்லியல் திணைக்களம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகிறது. எனவே இது தொடர்பில் தமிழ்த் தரப்புகள் அதிக கவனம் செலுத்தி, அதனைச் சர்வதேச நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

இதற்கு எங்கட புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் உதவுவது அவசியம்.

இவ்வாறு விதானையார் கூற, அதனை அனைவரும் ஒத்துக் கொள்வது போல மௌனம் காத்தனர். மௌனத்தின் இடையே பண்டிதர் பரமலிங்கத்தின் குரல் எழுந்தது.

**பண்டிதர்-** இலங்கையில் தொல்லியல் திணைக்களம் தமிழ் இனத்திற்கு- சைவ சமயத்திற்கு எதிராகச் செயற்படுகிறது.

இதற்குப் பௌத்த சிங்களப் பேரினவாதம் பின்னணியில நிண்டு நிதியுதவியும் வழங்குகிறது.

எனவே இந்த விடயத்தை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

**சாத்திரியார்-**
பிரதமர் மோடியின்ர பவரை உலக நாடுகள் ஏற்றிப் போற்றுகின்றன.

அண்மையில பப்புவாநியூகினியா நாட்டிற்கு இந்தியப் பிரதமர் மோடி விஜயம் செய்தார்.

அந்த நாட்டின் பிரதமர் ஜேம்ஸ் மாரப்பே பிரதமர் மோடியின்ர காலைத்தொட்டு அவரை வணங்கினார். பிரதமர் மோடியும் அவரை ஆரத்தழுவி தன்ர அன்பை வெளிப்படுத்தினார்.

**மூப்பர்-** அது மட்டுமல்ல சாத்திரியார். பப்புவா நியூக்கினியா நாட்டில சூரிய அஸ்த மனத்திற்குப் பின்னர் அந்த நாட்டிற்கு வருகின்ற எந்தத் தலைவர்களுக்கும் அந்த நாடு வரவேற்பளிப்பதில்லை.

இது அந்த நாட்டின்ர மரபு. ஆனால், பிரதமர் மோடி அந்தநாட்டிற்கு சூரிய அஸ்தமனத்திற்கு பின்னர் தான் சென்றிருந்தார். இருந்தும் தங்கள் நாட்டு மரபை மீறி, பிரதமர் ஜேம்ஸ் மாரப்பே விமான நிலையத்திற்குச் சென்று பிரதமர் மோடியை வரவேற்றதுடன் செங்கம்பளம் விரித்து உற்சாக வரவேற்பும் வழங்கியிருந்தார்.



பிரதமர் மோடியின் காலைத்தொட்டு வணங்கிய பிரதமர் ஜேம்ஸ் மாரப்பே

**சிறாப்பர்-** நீங்கள் இதைச் சொல்லுறியள். ஆனால் இந்தியப் பிரதமர் மோடி ஜப்பானில் நடந்த ஜி-7 உச்சி மாநாட்டில் பங்குபற்றச் சென்ற போது, அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் மற்றும் பிரிட்டிஸ் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோர் பிரதமர் மோடிக்கு மிகுந்த முன்னுரிமையினைக் கொடுத்திருந்தனர். இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் பிரதமர் மோடியைத் தேடிச் சென்று சந்தித்து தனது மரியாதையை வெளிப்படுத்தியிருந்தார்.

**கங்காணி-** அதெண்டால் உண்மை தான். இந்தியப் பிரதமர் மோடிக்கு உலக நாடுகளில மிகப் பெரிய மதிப்பும் கௌரவமும் இருக்குது.

உலகத் தலைவர்களிலே பிரதமர் மோடி முதன்மையானவராக இருக்கிறார். அவர் சொன்னால் உலக நாடுகள் அதற்கு ஒரு போதும் மறுப்புத் தெரிவிக்க மாட்டா.

நிலைமை இதுவாக இருக்கையில், எங்கட இனப் பிரச்சினைக்கான தீர்வை அவர் மூலமாகப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியை நாங்கள் நிச்சயம் செய்தாக வேண்டும்.

**வாத்தியார்-** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால் எங்கட தமிழ் அரசியல் தலைவர்கள் பிரதமர் மோடியுடன் நல்லுறவைப் பேணுவதில் பின்னடிக்கினம். அது தான் என்னெண்டு விளங்குதில்ல.

**விதானையார்-** ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிகழ்ச்சி நிரலில செயற்படுகினம்.

அமெரிக்ககாவின்ர பின்னணியில இயங்குகின்ற தமிழ்த் தரப்புகள். புலம்பெயர் தமிழ் அமைப்புகளின்ர கட்டுப்பாட்டில இருக்கிற தமிழ்த் தரப்புகள் இன்னும் [illegible] ஆதரவு வழங்கிக் கொண்டு வெளியில தமிழ் இனப் பற்றுப்போலக் காட்டுகிற தமிழ்த் தரப்புகள் என ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு வகை.

இந்த நிலையில எங்கட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியாவை சிக்கெனப் பிடிக்கிறதில எங்களிட்ட ஒற்றுமை இல்லை. அதனால எல்லாம் கெட்டுக் கிடக்குது.

**வாத்தியார்-** என்ன இருந்தாலும் இந்தியாவின்ர பிரதமராக மோடி இல்லாத காலத்தில தான், எங்கட நிலைமை மோசமாக இருக்கும்.

ஆகையால காலம் கடத்தாமல் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கும் தொல்லியல் திணைக்களம் தமிழ் இனத்திற்கு எதிராகச் செய்கின்ற அநியாயத்தைத் தடுத்து நிறுத்துவதற்கும் பிரதமர் மோடியை தமிழ் அரசியல் தரப்புகள் விரைவாகச் சந்திக்க வேணும்.

இதை விட்டுட்டு இந்துத்துவம் என்ற நினைப்போடு இந்தியப் பிரதமர் மோடியைப் பார்த்தால், எங்களுக்குப் பெரும் நட்டம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**பண்டிதர்-** வாத்தியார் சொல்வது நூறுவீதம் உண்மை. ஆனால் இதை முதலில எங்கட மக்கள் தான் புரிஞ்சு கொள்ள வேணும். இவ்வாறு பண்டிதர் கூற, இடையில் குறுக்கிட்ட விதானையார் விசுவலிங்கம்; பண்டிதர் ஐயா! இதை எங்கட மக்கள் மிகத் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கினம்.

ஆனால் அரசியலில ஆர்வம் கொண்ட எங்கட இளம் சமூகம் தான் இதைப் புரிந்து கொள்ள வேணும். அதர்மத்திற்கு ஆதரவளித்து தங்கட எதிர்காலத்தையும் பாழாக்கி, தமிழ் இனத்திற்கும் ஈனத்தைத் தேடுகினம். இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கோபாவேசத்துடன் கூற.

ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி-** அது சரி மாணவனைத் தாக்கிய ஆசிரியரைக் கைது செய்யிறதுக்குச் சட்டம் இருக்கிறது போல, ஆசிரியரைத் தாக்கிய மாணவனைக் கைது செய்கிற சட்டம் இல்லையோ.

**சிறாப்பர்-** என்ன கங்காணி சொல்லுறியள். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**கங்காணி-** இல்ல, யாழ்ப்பாணத்தில இருக்கிற ஒரு முஸ்லிம் கல்லூரியில ஒரு மாணவன் ஆசிரியன்ரத் தாக்கியிருக்கிறான். இருந்தும் இது தொடர்பில எவரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.


**வாத்தியார்-** முஸ்லிம் கல்லூரியில நடந்த இச் சம்பவம் தொடர்பில பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையென்றால் இது ஓர் இனத்துவ அடிப்படையில் தான் அந்த மாணவன் ஆசிரியரைத் தாக்கியுள்ளான் என்று நினைக்க வேண்டிவரும். ஆகையால இவ்வாறான பிரச்சினைகளுக்கு ஆரம்பத்திலேயே முடிவு கட்டிப் போட வேணும். இல்லையெண்டால் கிரந்தம் முற்றி பௌந்திரமாக்கிற கதையாகத்தான் முடியும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளைக் கொடியுடன் வந்தவர் களை சுட்டு கற்றதும் இனப்படு கொலை தானே?

**மதுவன் மீசாலை**

ஒரு தாயின் வளர்ப்பில் கட்டுப் பாட்டில் அடங்காத மகன் மனை விக்கு கட்டுப்படுவதைப் பற்றிக் கூறுங்களேன் வியாசரே?

தலையணை மந்திரத்துக்குள் சிக்கும் இன்றய எம் இளம் சமுதாயத்தின் வீக் னஸ் இதுதான். பெற்று வளர்த்த பெற்றோரை விட பொண்டாட்டி பெரி தென நினைக்கிறார்கள்.ஆனால் ஒன்று மட்டும் உண்மை. பெற்றோரை கஷ்ரப்பட வைக்கும் எந்த மகனும் வாழ்வில் நிம்மதியாக வாழ மாட்டார்கள்.இதைப் புரிந்து கொண்டால் சரி.

**திகான் வடமராட்சி**

Fiba உதைபந்தாட்ட தரப்படுத்தலில் இலங்கை 204 ஆவது இடம். இது திறமையின் இடமா?

பாடசாலை விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் தான் முதலிடம் என்றான் நணபன்.ஓ அப்படியா எத்தனை பேர் பாய்ந்தார்கள் என்றேன். நான் மட்டும்தான் பாய்ந்தேன் என்றான் நணபன்.

டேய் போட்டி முக்கியமில்லடா சேட்டிவிக் கட்தான் முக்கியமானது என்றான் கூலாக.

**மருதன் கீரிமலை**

மனித இனம் மட்டும் மனசாட்சியற்ற இனமாகி விட்டதே?

இது கலியுகம். இங்கு மிருகங்களிடம் கருணையிருந்தாலும் மனிதனிடம் மனி தம் அறவே இருக்காது.பணம், பதவி எனும் போதை மேலோங்க மமதையில் ஆடும் மனிதனின் இறுதி நிமிடங்களை வைத்தியசாலையில் காணலாம்.

ஆதலால், மனிதனிடத்தே மனிதத்தை எதிர்ப்பார்ப்பது தவறு.

**காயா கரம்பொன்**

அன்பு வியாசரே நம்பிக்கைத்துரோகம் செய்பவர்கள் பற்றி?

இன்றய நவீன உலகில் நம்பிக்கைத் துரோகத்தை யாரும் தவறான ஒன்றாகக் கருதுவதில்லை.

செய்வது எல்லாவற்றையும் செய்துவிட்டு தம்மை நியாயப்படுத்துவது அபத்தம்.

இது தொடருமாக இருந்தால் அதுவே உலக அழிவு என வகைப்படுத்தப்படும்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சிவம் வதிரி**

இலங்கைத் திருநாடு பொருளாதார சிக்கலில் இருந்து மீளுமா?

ஆக்கிரமிப்புகளை என்று கைவிடுகிறார் களோ அன்றைக்கே இலங்கைக்கு விமோசனம்.இதைப் புரியாதவரை யார் குற்றி முறிந்தாலும் எதையும் செய்துவிட முடியாது.


தமிழினத்துக்கு ஆட்சியாளர்கள் செய்தவை கொஞ்சநஞ்சமல்ல. காயப்பட்ட இனத்திற்கு மருந்திடுவதே முதலில் செய்யவேண்டியது.

**சுதன் குப்பிழான்**

வெள்ளைக் கொடியுடன் வந்தவர் களை சுட்டு கற்றதும் இனப்படு கொலை தானே?

நிராயுத பாணியாய் நின்ற இராவ ணனிடம் "இன்றுபோய் போர்க்கு நீ நாளை வா" என போர்தர்மத்தை இரா மயணத்தினூடே கற்று வாழ்ந்த எம்மால் இதை ஜீரணிக்க முடியவில்லை.

போரில் எதிரியையும் மதிக்க வேண்டும் என்பதை ஏனோ அவர்கள் கற்றுக் கொள்ள மறந்து விட்டார்கள் என்பதுதான் வேதனை.



இலங்கைத் திருநாடு பொருளாதார சிக்கலில் இருந்து மீளுமா?

**தமிழ் யாழ்ப்பாணம்**

எதிர்ப்புகள் எவ்வளவு இருந்தாலும் விகாரைகள் அமைக்கப்படுகின் றனவே?

இது சிங்கள பௌத்த நாடு.ஆதலால் எங்கும் எதிலும் புத்தர் வருவார். தமி ழர்கள் வாய் மூடி இருக்க வேண்டும்.

ஆக்கிரமிப்புக்கு தொல்பொருள் திணைக் களம் உண்டு.ஆக்கிரமித்ததை பாது காக்க காவல்துறையுண்டு. நீங்கள வாயை மூடிக் கொண்டிருந்தால் சரி. புரிஞ்சுதா?

**சாரா மாதகல்**

பிறரைப் பார்த்து சிரிக்கும் மனிதர் பற்றி?

வள்ளுவர், துன்பம் வரும் போது சிரி யுங்கள் என்றாரே தவிர, துன்பப்படு வரைக் கண்டு சிரிக்கச் சொல்லவில்லை.

என்ன செய்வது கடவுள் மனிதனுக்கு ஆறு அறிவு படைத்தது பகுத்தறிவுடன் நடப்பான் என்பதற்காகவே. ஆனால் நடப்பது தலைகீழாக இருக்கிறதே.

**ராஜ் உடுப்பிட்டி**

கனடாவினதும் இலங்கையினதும் போக்கு எவ்வாறு உள்ளது வியாசரே?

ஈழத்தமிழர்களுக்கு நடந்த இனவழிப்பு தொடர்பில் கனடா தொடர்ந்து குரல் கொடுத்து வருவதை பார்க்கும் போது மகிழ்ச்சியாகத் தான் உள்ளது.

ஆனால் இலங்கை அரசு அதனை பல் வேறு காரணங்கள் கூறி திசை திருப்ப முற்படுவது ஏற்றுக் கொள்ள முடியாததாக உள்ளது. எது எவ்வாறு இருப்பினும் பாதிப்பு எமக்கு தான் என்பதை இலங்கை அரசு எப்போது உணரப் போகின்றது என்பது தெரிய வில்லை.

**அச்செழு ரமேஷ்**

இன்று சென்னையா குஜராத்தா வெல்லும் வியாசரே

நடப்பு சம்பியனான குஜராத் அணி இம்முறையும் ஐ.பி.எல் இல் தனது ஆதிக்கத்தை செலுத்தி இறுதி வரை வந்துவிட்டது.

இருப்பினும் எதிரே நிற்பது சென்னை அணி என்பதால் அவர்களுக்கும் சற்ற பயம் இருந்தே தீரும். எவ்வாறாயினும் இன்று முடிவு தெரியும் இருந்து பார்ப் போம். வெல்லப்போவது குருவா? சிஷ்யனா? என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மன்மத லீலை
பாடியவர் : K.J.யேசுதாஸ்.
இசை : M.S.விஸ்வநாதன்
இயற்றியவர்: கண்ணதாசன்



மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்
மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்
மனது மயங்கி என்ன
உனக்கும் வாழ்வு வரும்
மனது மயங்கி என்ன
உனக்கும் வாழ்வு வரும்

மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்

இரவில் நிலவொன்று உண்டு
உறவினில் சுகமொன்று உண்டு
இரவில் நிலவொன்று உண்டு
உறவினில் சுகமொன்று உண்டு
மனைவியின் கனவொன்று உண்டு
எனக்கது புரிந்தது இன்று

மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்
மனது மயங்கி என்ன
உனக்கும் வாழ்வு வரும்
பொருத்தம் உடலிலும் வேண்டும்

புரிந்தவன் துணையாக வேண்டும்
பொருத்தம் உடலிலும் வேண்டும்
புரிந்தவன் துணையாக வேண்டும்
கணவனின் துணையோடு தானே
காமனை வென்றாக வேண்டும்

மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்

கவிஞன் கண்டாலே கவிதை
காண்பவன் கண்டாலே காதல்
கவிஞன் கண்டாலே கவிதை
காண்பவன் கண்டாலே காதல்
அழகினைப் புரியாத பாபம்
அருகினில் இருந்தென்ன லாபம்

மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்
மனது மயங்கி என்ன
உனக்கும் வாழ்வு வரும்
மனைவி அமைவதெல்லாம்
இறைவன் கொடுத்த வரம்

# ஞானமெனும் சாவியால்-உன் மனக் கதவை திறந்துவிடு

இயற்கையின் ஒரு பகுதியான மனிதன் தன் வாழ்வின் அவமானங்களில் இருந்தும் தோல்விகளில் இருந்தும் வறுமையில் இருந்தும் நோயிலிருந்தும் மரணத்திலிருந்தும் மீள முடியாமல் விழி பிதுங்கி மீள்வதற்கான ஒரு வெளிச்சத்தை தேடுகின்றான். ஆனால் மீள்வதற்கான வெளிச்சமோ அவனுக்கு இப்புறவுலகில் எங்கும் எதிலும் தென்படவேயில்லை.

அறியாமையெனும் தாயின் முதற் குழந்தையும் இறுதிக் குழந்தையும் மனிதன்தான் என்பதில் உண்மையை உணர்ந்த ஞானிகளுக்கு எந்த ஐயமும் இதுவரை எழுந்ததில்லை. ஏனோ மனிதனுக்கு அறியாமையில் தான் வாழ்கின்றோம் என்ற எண்ணம் ஒரு சிறு துளி கூட இருந்ததே இல்லை.

நிலையற்ற பொய்மையில் நிலை தடுமாறி ஊறிப்போன மனிதன் அந்த பொய்மையை தன் உண்மையான இய ல்பு என எண்ணி தன் வாழ்க்கையை நிரந்தரமாக்க கனவு காண்கின்றான். அவன் ஆயுள் எழுபது ஆண்டுகளைக் கூட தொட முடியாமல் தோற்றுப் போகின்றது. சமகால உலகில் இதுவே இயற்கையின் நியதி. ஆனால் இவ்வுலகில் மனிதன் கொள்ளும் பேராசையும் அவன் தேடும் அளவற்ற செல்வமும் பிறர் மீது கொள்ளும் பொறாமையும் அவனை ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ வைத்து விடும் என்ற நம்பிக்கையை இந்த பொய்மையான உலகம் அவனுக்கு கற்றுக் கொடுக்க ஒருபோதும் தயங்கியதே இல்லை. ஏனெனில் அவன் அறியாமையின் குழந்தையாய் இன்றும்



வாழ்ந்து கொண்டு இருப்பதனால்தான்.

இந்த அறியாமையை தன்னுடைய சொந்த அறிவு என சொந்தம் கொண்டாடும் வரை அவனுக்கு நூறு பிறவிக்கு பிறகும் தன் சொந்தப் பேரானந்த ஆன்ம அனுபவ நிலையை அனுபவிக்கும் சுகம் இன்னும் காலம் கடந்து போய்விடும் என்பதே யதார்த்த பூர்வமான சத்தியமாகும். தன் சரீரத்தையும் தன் மனதையும் சுற்றி வரும் உலக சகதியெனும் சுழிக்குள் பந்தப்பட வைத்து தன் நிரந்தர சுயத்தை ஒரு நொடி கூட உணர முடியாமல் தடுக்கும் இந்த இயற்கையை மனிதன் இன்று வரை இயன்றளவும் நம்புகின்றான்.

அந்த இயற்கையானது தன்னைச் சார்ந்து வாழும் மனித சமூகத்தை இன்னும் வாழ வைத்து விடுமென ஒவ்வொரு மனிதனும் நம்புகின்றபடியால் அவர்கள் இயற்கையை மீறவோ அல்லது எதிர்க்கவோ வலிமையற்றவர்களாகவே இருக்கின்றார்கள் என்பதை இது பெரிதும் வெளிப்படுத்துகின்றது. இந்தப் பிறவியில் தனக்கு வாய்த்த தாரமே அடுத்து வரும் ஏழு பிறவியிலும் தனக்கு தாரமாக வர வேண்டும் என எண்ணும் ஒரு மனிதன் எப்படி தன் ஆன்ம விடுதலையைப் பற்றி நிகழ்காலத்தில் சிந்திக்க முடியும். அவன் இதுவரை அனுபவித்து வந்த இன்பங்களை எல்லாம் இனி வரும் பிறவியிலும் அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் ஆன்ம விடுதலையின் சிந்தனையை முற்றாக நிர்மூலமாக்கி விடும் என்பதே நிச்சயம்.

தன்னைச் சுற்றி பல அடுக்குகளாக பின்னப்பட்டிருக்கும் இயற்கையின் பல மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் ஒரு சாவி மனித சமூகத்துக்கு தற்போது தேவைப்படுகின்றது. அதுதான் அறியாமையை உடைத்து அறிவை வளர்த்து பின் அதை அகற்றி விடும் சாவிதான் அந்த தெய்வீக ஞானம். அதை பெற்று விட்டால் பன்மையில் ஒருமையை நிச்சயம் கண்டு விடலாம்.

அறிவு, அறியாமை இரண்டும் நாம் இல்லை என்பதை ஆழமாக சிந்தித்துக் கொண்டு இந்த உணரக்கூடிய மனித ஆன்மாவை பெரிதும் உணரும் நுட்பமே ஆன்மிகமாகும். அதன் சிறு வாள் முனையே மன மாயை கிழித்தெறியும் உயர் ஞானமாகும். அதை ஒவ்வொரு மனிதனும் தன் மரணத்திற்கு முன்பே பெற்று விட துடியாய் துடிக்க வேண்டும்.

புறத்தே உலக ஆசைகளில் மட்டும் மூழ்கும் மனிதன் தன் உள்ளுணர்வுக்குள் இருக்கும் மனதையும் அடிக்கடி தொட்டுப் பார்க்க முயற்சிக்க வேண்டும். பின் அதன் இயல்புகளைப் படிப்படியாக புரிந்து கொண்டு ஆன்ம விடுதலைக்கான வாய்ப்பினை மனதுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டும். பின் ஆன்ம சாதனை மூலம் மனதை அழிக்கும் நிலையே தன்னைத் தானே உணரும் இறை நிலையாகும்.

உப்பிலே ஊறிப்போன எலுமிச்சைப் பழங்கள் ஊறுகாயாய் வெளிப்படுவது போல். இறை ஞானத்தில் ஊறிப்போன மனிதன் ஜீவாத்மா என்ற நிலையில் இருந்து பரமாத்மா என்ற நிலைக்கு இயற்கையாகவே உயர்த்தப்படுகின்றான். இதுவே ஒரு மனிதனின் எல்லையற்ற பேரானந்த நிலையாகும்.

சாம் - ரமேஸ்குமார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் இல் அறியப்படும் வீரர்கள்

பரபரப்பாக நடந்து வந்த 16 ஆவது ஐ.பி.எல் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. இந்த சீசனிலும் பல ஸ்டார் வீரர்கள் அதிரிபுதிரியாக பெர்ஃபாம் செய்திருந்தனர். இன்னொரு பக்கம் இளம் வீரர்கள் தங்களுக்கெனப் புது அடையாளத்தை உருவாக்கிக்கொள்ளும் வகையில் அழுத்தமிகு ஆட்டங்களை ஆடி புதிய ஸ்டார்களாகப் பரிமளித்திருக்கின்றனர். இந்த ஐ.பி.எல் சீசனில் தங்கள் பெர்ஃபாமென்ஸ் மூலம் இந்திய மற்றும் இலங்கைத் தேர்வுக்குழுவின் ரேடாரில் சிக்கும் வாய்ப்புள்ள வீரர்கள் சிலரைப் பற்றி இங்கே...



ரிங்கு சிங்

இந்த ஐ.பி.எல் சீசனின் ராக் ஸ்டார் ரிங்கு சிங்தான். நரம்புகளில் மின்னல் பாய்ச்சும் துள்ளலான இசைக் கச்சேரியைப் போன்றதுதான் ரிங்கு சிங்கின் ஆட்டம். 'இந்தக் காரியத்தைச் செய்ய இயலாது' என்கிற பேச்செல்லாம் ரிங்கு சிங்கின் அகராதியிலேயே கிடையாது. எதுவாக இருந்தாலும் இறங்கி ஒரு கை பார்த்துவிடுவோம் என்பதுதான் ரிங்குவின் பாணி.

அதனால்தான் குஜராத்துக்கு எதிரான போட்டியில் ஜெயிக்க, 5 பந்துகளில் 5 சிக்ஸர்கள் தேவைப்பட்டபோது எந்த அழுத்தமும் இல்லாமல் அவரால் அவ்வளவு இயல்பாக அந்த இமாலய இலக்கை எட்ட முடிந்தது. லக்னோவிற்கு எதிரான கடைசிப் போட்டியில் ரிங்கு கடைசிவரை நின்று வாள் வீசி வீழ்ந்தபோது எதிரணி வீரர்கள்கூட அவரைக் கொண்டாடி மகிழ்ந்தனர்

இந்த சீசனில் ரொம்பவே சொற்பமான போட்டிகளில் ஆடிய மோஷின் கான், தன்னுடைய தடத்தை வெறும் ஒரே ஒரு ஓவரில் பதித்துவிட்டுச் சென்றிருந்தார். மும்பைக்கு எதிரான போட்டியில் கடைசி ஓவரில் டிம் டேவிட்டையும் கேமரூன் க்ரீனையும் களத்தில் வைத்துக்கொண்டு 11 ரன்களை டிஃபண்ட் செய்து அசத்தியிருந்தார். காயம் காரணமாக இந்த சீசனில் பெரும்பாலான போட்டிகளில் ஆட முடியாமல் இருந்தார். அவரின் தந்தை தீவிர உடல்நலக்குறைவால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இப்படி ஒரு சூழலில்தான் அந்த மும்பைக்கு எதிரான போட்டியில் களமிறங்கி மோஷின் கான் சாதித்தார்.



மோஷின் கான்



யாஷஸ்வி ஜெய்ஸ்வால்

"மும்பையில் ஒரு எளிய பின்னணியிலிருந்து வந்த வீரர் ஒருவர் ஆடும் ஆட்டத்திற்கு இன்று ஜாம்பவான்களான குமார் சங்ககராவும் ஜோ ரூட்டும் பட்லரும் எழுந்து நின்று கைதட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சீசனில் ராஜஸ்தான் அணிக்காக அதிக ரன்களை எடுத்திருக்கும் வீரரும் யாஷஸ்விதான். 14 போட்டிகளில் 625 ரன்களை 163 ஸ்ட்ரைக் ரேட்டில் எடுத்திருக் கிறார். ஆரஞ்சுத் தொப்பிக்கான பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்திருக்கும் வீரர்களில் சூர்யகுமார் மற்றும் க்ளாஸனின் ஸ்ட்ரைக் ரேட் மட்டும்தான் யாஷஸ்வியைவிட அதிகமாக இருக்கிறது.

ஐ.பி.எல் சீசனில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடும் இலங்கை வீரர் மதீச பத்திராணாவின் பந்துவீச்சு மிகவும் அச்சுறுத்தல் மிக்கதாக உள்ளது. லசித் மலிங்கவின் பந்து வீச்சு சாயலைக் கொண்ட அவரின் பந்து வீச்சு எதிரணி வீரர்களை அச்சுறுத்தி வருகிறது. ஐ.பி.எல் போட்டியில் வெளிக்காட்டும் திறமையால் இவருக்கு இலங்கை அணியில் விளையாடும் வாய்ப்புக்கள் அமையும் சாத்தியமுண்டு.



மதீச பத்திரணா



துஷார் தேஷ்பாண்டே

இந்த சீசனில் அதிகம் ட்ரோல் செய்யப்பட்ட வீரர் துஷார் தேஷ்பாண்டேதான். ஓவருக்கு 10 பந்துகளுக்கு மேல் வீசி டோனியையே ஒரு கட்டத்தில் கிறுகிறுக்க வைத்திருக்கிறார். எதிரணிக்கு உதவ இம்பாக்ட் ப்ளேயராக இறங்குகிறாரோ என ரசிகர்கள் கலாய்த்துத் தள்ளினர். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல தொடர் வாய்ப்புகளைப் பெற்று துஷார் தேஷ்பாண்டே ஒவ்வொரு போட்டியிலும் தன்னை மெரு கேற்றிக்கொள்ளத் தொடங்கினார். சென்னை அணிக்காக இந்த சீசனில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் எனும் பெயருமே துஷாருக்குக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

## போர்க்களத்தில் ரோபோ...

2010 ஆம் ஆண்டு வெளியான "எந்திரன்" படத்தில், 'சிட்டி' ரோபோவை இராணுவத்தில் பயன்படுத்துவது போல ஒரு காட்சி இடம்பெற்றிருக்கும். அந்தச் சமயத்தில், "இது இயக்குநரின் கற்பனையே... நிஜத்தில் இதெல்லாம் நடக்கவா போகிறது?" என்று நம்மில் பலரும் நினைத்திருப்போம். ஆனால், தற்போது அது நிஜமாகிக் கொண்டிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் மூலம் போர்த் தேவைகளுக்காக ரோபோக்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

வேகமாக வளர்ந்துவரும் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் தற்போது, ஆயுதங்கள் தயாரிப்பிலும் தடம்பதிக்கத் தொடங்கியிருக்கிறது. "எல்.ஏ. டப்ள்யு.எஸ்" (LAWS-Lethal Autonomous Weapons Systems) என்றழைக்கப்படும் இந்த ரோபோக்களை, 'கில்லர் ரோபோக்கள்' என்கிறார்கள் எதிர்ப்பாளர்கள். ஏற்கெனவே, ஆளில்லா ட்ரோன்கள் யுத்தங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகை ட்ரோன்கள் பயன்பாட்டில் இலக்கைக் குறிவைப்பதும் அவற்றை விண்ணில் ஏவுவதும் மனிதர்கள்தான். ஆனால், 'கில்லர் ரோபோக்கள் தாங்களாகவே முடிவெடுத்து, டார்கெட்டைக் குறிவைத்துத் தாக்கக் கூடியவை. அதற்கு அதிகாரிகளின் கட்டளையோ, சிப்பாய்களின் உதவியோ தேவைப்படாது' என்கிறார்கள் வல்லுநர்கள். கில்லர் ரோபோ ஆயுதங்களைத் தயாரிக்க, அமெரிக்கா, இந்தியா, சீனா, இங்கிலாந்து, இரான், இஸ்ரேல், துருக்கி, தென்கொரியா, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகளும் அதிக அளவில் முதலீடுகளைச் செய்து வருகின்றன.

செயற்கை நுண்ணறிவு தானியங்கி ஆயுதங்களை ஆதரிக்கும் பல நாட்டு இராணுவ உயரதிகாரிகளும் "வீரர்களைப் பயன்படுத்தாமல் சில போர்ப் பணிகளை, தானியங்கி ஆயுதங்களை வைத்துச் செய்ய முடியும். இதன் மூலம் உயிரிழப்புகள் வெகுவாகக் குறையும். கில்லர் ரோபோக்களில் இருக்கும் அதிநவீன தொழில்நுட்பம், துல்லியமாக முடிவெடுக்கும் திறன் கொண்டது. எனவே, மனிதத் தவறுகள் நிகழ வாய்ப்பில்லை. மேலும், தற்காப்பு ஆயுதமாக இதைப் பயன் படுத்தும்போது மனிதர்களை விட வேகமாக எதிரிகளைக் கண்டறிந்து, துல்லியமாக அச்சுறுத்தலை அகற்றிவிடும்" என்கிறார்கள்.

இதைக் கடுமையாக எதிர்க்கும் பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் சிலர், "எந்த மேற்பார்வையும் இல்லாமல் இயங்கும் இந்த கில்லர் ரோபோக்களில், தொழில் நுட்பக் கோளாறு ஏற்பட்டால், அதைத் தடுத்து நிறுத்துவது கடினம். அதனால், கடும் பின்விளைவுகள் ஏற்படும். மனித உயிர் சார்ந்த விடயங்களில் உணர்ச்சியற்ற ரோபோக்கள் எடுக்கும் முடிவுகள் நிச்சயம் சரியாக இருக்காது. சர்வதேச சட்ட விதிகளை மீறி ஒரு ரோபோ போர்க் குற்றங்களில் ஈடுபட்டால், யார் அதற்குப் பொறுப் பேற்பது... அணு ஆயுதங்களைப் போலவே இவையும் உலக நாடுகளின் அமைதியைக் கெடுத்து, மோசமான பின்விளைவுகளை உண்டாக்கக் கூடியவையே" என்று கொந்தளிக்கின்றனர்.

"கில்லர் ரோபோக்கள் தயாரிப்பை நிறுத்துங்கள்" என்று சில தன்னார்வல சமூக அமைப்புகள் போராடியும் வருகின்றன: "வாகன விபத்துகளை முன்பே கண்டறிந்து தடுப்பதற்கு, இந்த செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலாம். அதற்கான ஆராய்ச்சிகளில் உலக நாடுகள் பணத்தைக் கொட்டா மல், ஆயுதங்கள் தயாரிப்பில் பணத்தைச் செலவழிப்பது கவலையளிக்கிறது. செயற்கை நுண்ணறிவை நல்ல விடயங்களுக்குப் பயன்படுத்துங்கள்" என்று கெஞ்சுகிறார் கள் தொழில்நுட்ப வல்லுநர்கள் சிலர்.

"நாட்டையும் மக்களையும் பாதுகாக்கவே ஆயுதங்கள். உலக அமைதியைச் சீர்குலைக்க அல்ல" என்பதைப் புரிந்துகொண்டு உலக நாடுகளின் இராணுவங்கள் செயற்பட வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்ட பயணங்கள்

இங்கே சுற்றுலாப்
பயணங்களில்
பன்னாட்டு பணங்களில்
உலா வருகிறது!
எம்முரிமை உலா
நீண்ட பயணங்களில்
முற்றுப் புள்ளிகள்
இன்னும் தொடர்களாக
பன்னாட்டு அறிக்கைகளாக
வெளிச்சத்தின் இருட்டுகளாய்
இங்கே உலா வருகிறது.
அணி சேர்ந்து வீதி உலா
அணி பிரிந்து அரசியல் விழா
சுமத்துப் பாதைகள்
இன வெள்ளத்தில்
மூழ்கிட...
நீண்ட பயணங்கள்...
தொடர்கின்றன...
அரசாளுமை ஆசைகளில்



தமிழினியன்-பரந்தாமன்,
வவுனியா.

## மனசாட்சி

சயனிக்கும்
ஒவ்வொரு நொடிகளும்
பறைசாற்ற
மறப்பதில்லை
பறையோடு - நாம்
மடியப் போவதை

காலப் பெரு வெளியில்
கன்றாக இன்றி
மரமாகவே
எத்தனிக்கின்றன
எல்லா உயிரகளும்

முரண்பாட்டு
எல்லைகளும்
வில்லைகளால்
விலை பேசப்பட்டு
வீதியிலேயே
நிற்கின்றன
விற்பனைக்காக...!

எடுப்பவரை
ஏற்றிவிட்டு
கொடுப்பவரை
புறந்தள்ளி
புன்னகை
புரிகிறது
காலம்...!

தமிழ்விழி, சுஜீவனி
ஈரோடு, தமிழ்நாடு.



## என் அம்மா!



ஈர ஐந்து மாதங்கள் என்னை
கருவில் சுமந்து படாத
துயர்பட்டு உங்கள் உயிரை
பணயம் வைத்து எனக்கு
உயிரைத் தந்த என் அன்பான அம்மாவே!

காலங்களும் புரண்டு ஓட
பிரசவித்த தருணங்களும் பறந்தோட
அன்பாக அரவணைத்து உங்கள்
உதிரத்தை பால் ஆக்கி
எனக்கு அமுதமிழ்த்து பாசமுடன்
இந்தப் பாரினிலே என்னை
வளர்த்த என் அன்பான அம்மாவே!

உங்கள் மனதில் இருக்கும்
கவலைகள் சொல்லாதவைகளாய்
மனக் குமுறல்கள் உங்களை விரட்ட,
எம்மைப் பார்த்தவுடன்
மனதில் இருக்கும் கவலைகளைக்
காட்டாது எம்மைப் பாசமுடன் அரவணைத்து
அன்பாய்க் கட்டியணைக்கும்
என் அன்பான அம்மாவே!

உங்கள் பாசத்திற்கு - ஒரு
குறையும் கூற முடியாது
என் அன்பான அம்மாவே

இந்த உலகத்தில்
ஈடு இணையற்றது அம்மா
உங்கள் பாசம்!

சு.பிரகாசனா,
திருநெல்வேலி.

## மௌனத்தின் தேடல்- 670



## கோரத் தாண்டவம்

கொத்துக் கொத்தாய் குண்டு போட்டு
கோரத் தாண்டவம் ஆடிய பாதகனே
பச்சிளம் குழந்தை முதல் பாடுபட்ட பெரியோர் வரை
பலிக்கடா ஆக்க உனக்கு எப்படித்தான் மனது வந்ததோ?
முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்தேறிய கொடுமைகளை -எண்ணி
முள்ளிவாய்க்கால் கஞ்சிதனைப் பருகி
முழு மாநிலங்களும் கண்ணீர் வடிக்கும்
வைகாசிப் பதினெட்டில்
உடல் சிதறி பலியான எம் உறவுகளுக்காய்
உரிமையுடன் ஈகைச் சுடர் ஏற்றிடுவோம்

ஆ.செல்வி.
திருநாவலூர்.

## எரிவது நெருப்பல்ல

பற்றி எரிவது நெருப்பல்ல
எம் நெஞ்சணுக்களின் கொதிப்பு
குண்டு மழையினால்
குருதிக் கடலில் குளித்த
எம் இனத்தின் கதறல்
அழிவிக்கானவர்களை கருவறுக்கும்
அதற்காகவே இந்நெருப்பு
வளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது

உ.கிஸ்ான்.

## மீண்டும் ஒன்றாய் எழுகின்றோம்

புத்தன் சொன்னது பொய்யாப் போச்சே
இந்தப் பூமியிலே
நித்தம் நித்தம் இரத்தம் தானா
இலங்கை நாட்டினிலே
கத்தும் கடலும் ஓயாது
நாம் கதறும் ஒலியும் தீராது
மானிடம் இங்கே மரித்ததினால்
மனதில் கவலை மாறிடுமோ
கொத்துக் கொத்தாய்க் கொன்றாலும்
வெட்டிக் கொத்திக் குவித்தாலும்
மீண்டும் ஒன்றாய் எழுகின்றோம்
உறவை எண்ணி அழுகின்றோம்

V.லக்ஸ்மி, ஆனைப்பந்தி.

## மௌனத்தின் தேடல்- 671



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஆழ்ந்த இரங்கல்

மானம் காக்க தமிழ் இனம் வீரம் கொண்டு
முள்ளிவாய்க்கால் மண்ணில் இறுதி யுத்தம்
கொத்துக் கொத்தாய்த் தமிழ் இனம் செத்துப் போச்சு
நந்திக் கடலில் இரத்தம் அலையாய் கரையில் நுரையாகி
மீளாத்துயில் கொள்ளும் தமிழ் இனம்
ஆறா வடுக்களாய் மனங்களில்
காலங்கள் கடந்து ஓடலாம்
நம் உறவுகள் நினைவாய்
கண்ணீர் காணிக்கையாய் ஆழ்ந்த இரங்கல்

[illegible], உடுப்பிட்டி.

## உயிரும் உணர்வுகளும்

சோகங்களை யோசிக்க வைக்கும்
மௌனத்தின் தேடல்கள்
அலைகடல் போல்
ஓசையுடன் தொடர்ந்தாலும்
காலம் தான் விரைந்து
கண்ணீரில் கரைகின்றது
காரணிகள் கண் திறந்து
காட்சிகளைக் காண மறுத்து
அலைந்து திரிய வைக்கும்
கலைக்க முடியாக் கடும் தவத்தில்

க.நாகராசா, நுணாவில்.

## மாற்றம் இல்லாமல்

மடை திறந்தாய்
விழிநீர் பெருகிட
உள்ளக் குமுறல்கள்
விம்மலாய் வெடித்து ஒலிக்க
இதயத்தின் தாகங்கள்
சூடாய் ஒலிபரப்ப
ஆண்டுகள் சென்றாலும்
மறப்போமா உம்மை
மாறிடுமோ எம் மனங்கள்

சி.இ.அன்புதுரை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 63

# கடல்புறா

## நான் யார்?

"முழுவதும் விண்டு சொல்ல எனக்கு உரிமை இல்லை. மகளே! ஆனாலும் ஓரளவு சொல்லலாம் சொல்வதை மட்டும் கேட்டுக்கொள். காலம் வரும்போது மற்றதையும் நீ அறிவாய் என்று மீண்டும் அவளுக்கு முதுகைத் திருப்பிக் கொண்ட அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன், "மகளே! நம் இருவர் வாழ்க்கையிலும் பெரும் திருப்பங்களை ஏற்படுத்திய நாள் இது.

இன்று வந்த இளையபல்லவன் உன் வாழ்க்கையில் மட்டுமல்ல என் வாழ்க்கையிலும், ஏன், இந்த ஸ்ரீவிஜய சாம்ராஜயத்தின் வாழ்க்கையிலும் குறுக்கே புகுந்திருக்கிறான். அதன் விளைவு நல்லதா பொல்லாததா எனக்குத் தெரியாது. ஆனால் அவன் குறுக்கீட்டை, செல்வாக்கை இனி இந்த அக்ஷயமுனையில் அவன் துவங்கக் கூடிய அலுவல்களை நானோ நீயோ தடை செய்ய முடியாது. ஆகவே அவற்றை நமக்கும் நமது நாட்டுக்கும் எத்தனை பயனுள்ளதாகச் செய்துகொள்ள முடியுமோ அத்தனை பயனுள்ளதாகச் செய்துகொள்ள வேண்டும். புரிகிறதா?" என்று கேட்டான்.

உண்மையில் அஷயமுனைக் கோட்டைத்தலைவன் எதைச் சொல்ல முயல்கிறான் என்பது அவளுக்குப் புரியவில்லை. ஆகவே, "புரியவில்லை," என்று உண்மையைச் சொன்னாள் அவள்.

"புரியாதது எனக்கு வியப்பா யில்லை மகளே! உனக்கு இன்று பல விஷயங்கள் புரியவில்லை. உதாரணமாக என் பேச்சும் போக்கும் உனக்குப் புரியவில்லை. ஒரு தந்தை மகளிடம் பேசத்தகாத வார்த்தைகளை நான் பேசினேன் அல்லவா?" என்று கேட்டான் அவன்.

"ஆம், பேசினீர்கள்" என்றாள் அவள், அவன் எதற்காக அந்தக் கேள்வியைக் கேட்கிறான் என்பதை அறியாமல்.

"ஏன் அப்படிப் பேசுகிறீர்கள் என்று நீ கேட்டாய்," என்று பலவர்மன் பழைய கேள்வியை நினைப்பூட்டினான்.

ஆம் கேட்டேன்.என்றாள் அவள் எதற்காக -அந்தப் பழைய கேள்விகளைத் திரும்ப வலியுறுத்துகிறார், தந்தை என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் மிகுந்த குழப்பத்துடன்.

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது அத்தனை சுலபமல்ல மகளே என்ற பலவர் மன் சோகப் பெருமூச்சு விட்டான்.

'ஏன்? என்ன கஷ்டம் அதில்' என்று அவள் வினவினாள். குழப்பம் முன்னைவிட அதிகமாக

"சுமார் பத்தொன்பது வருஷங்களின் பொய்யை உடைப்பது அத்தனை சுலபமென்று நினைக்கிறாயா நீ" என்று கேட்டான் பலவர்மன். "பத்தொன்பது வருஷங்களின் பொய்யா??" "ஆம்." "அத்தனை நாள் பொய் ஏன் மறைந்து கிடந்தது? "மெய்யைச் சொல்ல அவசியமில்லை." "இப்பொழுது அவசியம் ஏற்பட்டிருக்கிறதா?"

சந்தேகத்துக்கிடமின்றி ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் இந்த விஷயத்தை இன்று நான் பேசத் துவங்கி இருக்கமாட்டேன்"

அவன் சொற்கள் அவளை மேலும் மேலும் குழப்பின. அன்று காலை முதலே உணர்ச்சிகள் நரம்புகளைப் பல வழிகளில் உருட்டிக் கொண்டிருந்ததால் பெரும் பலவீனமடைந்திருந்தாள் மஞ்சளழகி. இளையபல்லவன் இதயத் தைப் பறித்துக்கொண்டதால் ஏற்பட்ட சிந்தனைகள், கடற்கரை நிகழ்ச்சியில் கண்ட விளைவுகளால் உண்டான மன நெகிழ்ச்சி, தவிர நடனத்தில் ஆயாசம் எல்லாமாகச் சேர்ந்து அவள் கைகளுக்கும் கால்களுக்கும் பெரும் சோர்வைக் கொடுத்தன. பலவர்மன் அவளைத் திரும்பிப் பார்க்காமலே மேற்கொண்டும் பேசினான். "மகளே! உனக்கு இப்பொழுது வயது இருபதை எட்டிக் கொண்டிருக்கிறது.

(தொடரும்...)

---

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 09

தமிழ் இலக்கிய விருட்சத்தின் வேர்களில் உயிரின் ஈரம் உலராமலிருப்பதனால்தான் அது தன் கிளைகளில் ரத்த ஓட்டமுள்ள பூக்களைப் பூப்பிக்க முடிகிறது.

நேற்றுப் புதிதாய் முளைத்த தளிருக்குள்ளும் அதன் பழைய வேர்கள் தண்ணீரைப் பாய்ச்சுகின்றன.

அந்த விருட்சத்தில் ஆடும் விழுதுகள் எல்லாம் வேர்களுக்கு நன்றி சொல்லி முத்தமிடுகின்றன.



அதன் கிளையில் புதிதாய்ப் பூக்கும் எதுவும் அதன் போன வருஷத்துப் பூ எதனின் நிறத்தையோ, குணத்தையோ, மகரந்தத்தையோ தன்னில் கொண்டிருப்பது தவிர்க்க இயலாதது.

ஒரு புதுக் கவிதையில் எனக்குக் கபிலன் குரலும் காதில் விழுகிறது. சங்க இலக்கியத்திற்குப் பிறகு, வாழ்க்கையே தீர்மானித்துக் கொடுத்த ஒரு வடிவ வார்ப்பை புதுக் கவி தையில் பார்த்துப் பூரித்து என அடி மனசின் அணுக்கள் ஆரவாரிக்கின்றன.

உலகம் தழுவிய சூரியனின் தங்கக் கிரணங்களைக் குடைபிடித்துக் கொள்வதனாலேயே யாரும் நிராகரித்து விட முடியாது. புதுக் கவிதையைப் போற்றும் காலம்

## புதுக்கவிதையின் பாடுபொருள்

புலரத் தொடங்கி விட்டது.

நேற்று வரைக்கும் ஜன்னலைக் கூடச் சாத்தியவர்கள் இன்று கதவையே திறந்து வைத்துக் காத்திருக்கிறார்கள்.

எழுதும் தாகம் இன்று எல்லோருக்கும் இருக்கிறது.

புதுக்கவிதை என்னும் பூங்கொடி தெருக்களின் சுவர்களிலெல்லாம் படர ஆரம்பித்துப் பல நாளாயிற்று.

இன்று திருக்குறளோடு புதுக்கவிதையும் சேர்த்து உச்சரிக்கப்படுகிறது.

இது தமிழின் இலாபம். புதுக் கவிதையின் பாடுபொருள் யாது? எப்பொழுதும் இது ஒரு வெப்ப வினாவாகவே இருக்கிறது.

இந்தச் சுடுகேள்வி ஒன்றும் சுமையன்று. கவிதையின் பாடு பொருள் எதுவோ அதுவே புதுக்கவிதையின் பாடுபொருளும்.

கவிதை என்பது வாழ்க்கையின் விசாலமான விலாசம்.

மனிதனே கவிதையின் பாட்டுடைத் தலைவன்.

மனிதமே கவிதையின் பாடு பொருள்.

வழக்கமான கவிதைகளால் தொட முடியாத உயரங்களையும் அடைய முடியாத ஆழங்களையும் புதுக்கவிதை தனது விசாலமான கைகளால் வீசியும் தனது கனமான கால்களால் அகழ்ந்தும் துழாவியும் தொட்டு விடுகிறது. அது வாழ்க்கையைப் பாடுவதற்குக் கூறிய வார்த்தைகளையே தேர்ந்தெடுக்காமல் கூறிய வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கிறது.

புதுக்கவிதையின் பாட்டுடைத் தலைவன் ராஜலட்சணங்கள் பொருந்திய மகுடம் தரித்த மன்னன் அல்லன்.

ராஜ பாட்டையையே நேசித்த பழங்கவிதையைப் போல் அல்லாமல் புதுக்கவிதையோ நடைபாதையை நேசிக்கிறது.

எனவேதான் இலக்கணத்திற்குப் பதிலாக அது உண்மையை உடுத்துக் கொண்டிருக்கிறது.

பாரதி என்னும் மானுடக் கவிஞன்தான் தமிழில் புதுக் கவிதையின் பிதாமகன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

350

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஆட்டிசம் நிலைமையுடைய குழந்தைகளை எப்படி அடையாளம் காணலாம்?

**ஆட்டிசம் (Autism) என்றால் என்ன?**

நரம்புத் தொகுதியில், முக்கியமாக மூளை விருத்தியில் ஏற்படுகின்ற அசாதாரண மாற்றத்தால் அல்லது குழப்பத்தால் உருவாகும் இந்த நிலைமை பின்வரும் அறிகுறிகளைக் கொண்டிருக்கும்.

1. பேச்சு வன்மையில் தடங்கல் அல்லது பாதிப்பு. (Impaired communication ).

2. சமூகத் தொடர்பாடலில் பாதிப்பு ( Impaired social interaction )

3. மீண்டும் மீண்டும் செய்யும் நோக்கமில்லாத உடலசைவு. ( Repetitive movements ).

**ஆட்டிசம் என்ற நிலைமை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

இன்று வரை அடிப்படைக் காரணம் என்னவென்று தெரியாது.

ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

பரம்பரை அலகுகளில் வரும் மாற்றம் (Gene mutation) என்று சந்தேகிக்கப்படுகிறது.

தடுப்பூசிகள் ( Vaccines ) இந்நிலைமைக்கு காரணம் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**இந்நிலைமையுடைய குழந்தைகளை சமுதாயத்தில் எப்படி அடையாளம் காணலாம்?**

குழந்தைகளுக்கு உடலில் வெளிப்படையாக எந்தப் பாதிப்பும் இருக்காது. இவர்களின் நடத்தையை உற்றுநோக்குதலின் மூலம் குறைபாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாகப்

1. பிறரோடு கண்ணோக்கிப் பேசுவதில் சிக்கல் இருத்தல். (Poor eye contact)

2. தன் வயதொத்தவர்களுடன் நட்புணர்வு கொள்வதிலும் சமூகத் திறன்களை வெளிக்காட்டுவதிலும் ஈடுபாடற்று இருத்தல்.

3. பிறருடன் பொருந்திச் செல்லாமல் தனித்து இருத்தல் (உணவு, விளையாட்டு போன்றன).

4. பேச்சுத் திறனற்று இருத்தல். அல்லது சொல்லியவற்றை மீண்டும் மீண்டும் சொல்லுதல்.



5. அன்றாட வேலைகளில் ஏற்படும் சிறு மாற்றத்தைக் கூட எதிர்கொண்டு சமாளிப்பதில் சிக்கல் இருத்தல்.

7. மீண்டும் மீண்டும் செய்யும் நோக்கமில்லாத உடலசைவுகள். (Stimming )

8. பரபரப்பான சத்தம் நிறைந்த சூழல்களில், (எடுத்துக்காட்டாக, விளையாடுமிடம்) மிகவும் படபடப்புடன் காணப்படுதல்.

9. சிலருக்கு சிலவகைத் துணிகள் அணிவதிலோ அல்லது தங்கள் உடல் மேல் உடை உராயும் போதோ சிரமம் ஏற்படுதல்.

**எப்படி இந்த நிலைமையைக் கண்டுபிடிப்பது?** (Diagnosis)

இருக்கும் பல விதமான முறைகள் வினாக் கொத்தை அடிப்படையாகக் கொண்டவை.

குழந்தை நல மருத்துவர், மனநோய் மருத்துவர், மனோதத்துவ நிபுணர் கொண்ட குழு இந்த நிலைமையை இனங்காணுவர்.

இந்த நிலைமையை அடையாளம் காண சிறப்புப் பரிசோதனைகள் (Special tests) கிடையாது.

**தாய் கர்ப்பமாக இருக்கும் போதே கருவில் இந்த நிலைமையை கண்டுபிடிப்பதற்கு சோதனைகள் இருக்கின்றதா?**

இன்னும் இல்லை.

**எந்த வயதில் இந்த நிலைமை இனங்காணப்படுகிறது?**

இந்நிலைமையுடைய குழந்தைகளின் அடையாளங்கள் முதல் மூன்று வயதிற்குள் வெளிப்படும்.

ஆனால் பிள்ளைகளின் வளர்ச்சிப்படி நிலைகளில் ஏற்படும் கவலைக்கிடமான தாமதங்களையும் கருத்திற் கொண்டு இடையீடுகளைக்(Interventions) காலதாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும்.

**பிள்ளைகள் எந்த விகிதத்தில் பாதிக்கப்படுகிறார்கள்?**

அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மையத்தின் (CDC) 2014 ஆம் ஆண்டு புள்ளிவிபரத் தரவுகளின் படி 68 குழந்தைகளில் ஒரு குழந்தை நிலைமையால் பாதிக்கப்படுகிறது.

இந்நிலைமை பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளில் ஏறத்தாழ 5 மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது.

**இந்த நிலைமையை பூரணமாகக் குணப்படுத்துவதற்கு மருந்து உள்ளதா?**

இது நோயல்ல. மருந்துகளால் குணப்படுத்த முடியாதது. இது வாழ்நாள் வரையில் நீடிக்கும் நிலைமையாகும்.

ஆனால் இடையீடுகள் உள்ளது. இவ்விடையீடுகளை காலதாமதமின்றி ஆரம்பித்தால் நிலைமை கடினமாவதைத் தடுத்து இக்குழந்தைகளும் ஓரளவுக்கேனும் சாதாரண குழந்தைகள் போல் செயற்பட வாய்ப்புகள் உள்ளது.

**எந்த வயதில் இந்த இடையீடுகளைத் தொடங்க வேண்டும்?**

இடையீடுகளை காலதாமதமின்றி, நிலைமையை அடையாளம் கண்டவுடன் தொடங்க வேண்டும்.

**எப்படியான இடையீடுகள் (Interventions) பரிந்துரைக்கப்பட்டுள்ளன?**

பின்வரும் இடையீடுகள் இக்குழந்தைகளை சமுதாயத்துடன் ஒத்து வாழ்வதற்கு உதவி செய்வதாக ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

1. பிரயோக நடத்தைப் பகுப்பாய்வு (Applied behavior analysis).

2. தொழில் சிகிச்சைப் பயிற்சியும் உணர்ச்சி ஒருங்கிணைப்பும். (occupational therapy and sensory integration).

3. பேச்சு சிகிச்சைப் பயிற்சி (speech therapy).

4. உடல் சிகிச்சைப் பயிற்சி ( physical therapy ).

**இப்படியான இடையீடுகளை எப்படித் தொடங்க முடியும்?**

இடையீடுகளைத் தொடங்குவதற்கு பயிற்சி பெற்ற சிகிச்சையாளர்களின் உதவியை நாடலாம்.

இதற்கு வைத்தியரின் மதிப்பீடும் பரிந்துரையும் தேவை.

**இப்படியான இடையீடுகளை எங்கு தொடங்க முடியும்?**

இந்நிலைமைக்கான சிகிச்சையை வீடுகளிலும் பாடசாலைகளிலும் "மாதவம்" போன்ற சிறப்புப் பயிற்சி நிலையங்களிலும் தொடங்கலாம். தொடரலாம்.

**காவேரி சிவரூபன்,** MD.
**சிவாணி பத்மராஜா,** MD.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது போதையில் மனைவியை அலவாங்கால் குத்திக் கொன்ற கணவன்

(கொழும்பு)

இளம் குடும்பப் பெண் ஒருவர் அலவாங்கால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்த அவரின் கணவனே இந்த வெறியாட்டத்தைப் புரிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வத்தளைப் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் சாவடைந்த 28 வயதுடைய பெண், அரச வைத்தியசாலை ஒன்றில் தாதியாகப் பணிபுரிந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர் மூன்று வயதுடைய ஆண் குழந்தையின் தாய் ஆவார்.

கொலையாளியான கணவனைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# இலங்கை வரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படும் விசா அபராதம் குறைப்பு

(கொழும்பு)

இலங்கையில் விசா காலாவதியான வெளிநாட்டவர்களிடம் அறவிடப்படும் 500 டொலர் அபராதத்தை 250 டொலர்களாக குறைக்க பொது பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது. இந்த அபராதத் தொகையால் சுற்றுலாத்துறைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து வெளிநாட்டவர்களிடம் இருந்து வந்த முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற விவாதத்தில் இதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

விசா காலாவதியாகி ஒரு மணித்தியாலத்திலேயே சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த அபராதம் விதிக்கப்படுவது மிகவும் அநியாயமானது எனவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபராதம் காரணமாக சில சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் சுற்றுப்பயணத்தில் ஈடுபட விரும்பவில்லை என சுற்றுலாத்துறை அமைச்சகம் அவ்வப்போது கருத்துக்களை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# சணல் உற்பத்தியில் அந்நியச் செலாவணி

## அரசு புதிய திட்டம்

(கொழும்பு)

நாட்டில் சணல் உற்பத்திக்கான முன்னோடி திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை தீர்மானித்துள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அறிவித்துள்ளார். சணல் உற்பத்தியை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவினர், சணல் பயிர்ச் செய்கைக்கான முன்னோடித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கை முதலீட்டுச் சபைக்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் திலும் அமரனுகம தெரிவித்தார்.

திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பாளர்கள் மற்றும் நிபுணர்களுடன் ஆலோசித்து வருவதாகவும் அதன்படி ஒரு பகுதி தேர்வு செய்யப்பட்டு விரைவில் சோதனை செய்யப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து சணலை ஏற்றுமதி செய்வதற்காக திட்டத்தை ஆரம்பிக்க சில முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடியதாகவும் அது நாட்டுக்கு டொலர்களை கொண்டு வருவதற்கான ஒரு வழியாக அமைய வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (4)


## சொர்க்கம் திருமண சேவை (கனடா)

1. கனேடியன் citizen உள்ள 36 வயது, (R.C) மணமகனுக்கு இலங்கையில் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
2. 1992 இல் பிறந்த இந்து ( Police Officer- SL) மணமகனுக்கு இலங்கையில் மணமகள் தேவை.
3. Singapore இல் வசிக்கும் 33 வயது (Software Engineer) மணமகனுக்கு இலங்கையில் படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

(16767)

தொடர்புகளுக்கு : 0014166661855 (கனடா)
0772000230/ 0778876969 (யாழ்ப்பாணம்)



## சாரதி உடன் தேவை

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் அமைந்திருக்கும் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் (AD) வாகனம் செலுத்துவதற்கு சாரதி தேவை. கடமை நாட்கள் திங்கள் - வெள்ளி வரை. காலை 8.00- மாலை 4.30 மணிவரை. சனி காலை 8.00-மதியம்1.30மணிவரை. வேதனம் மாதம் முடிவில் ரூபாய் 30000.00 வழங்கப்படும். சாரதியின் செயற்பாடு உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலக எல்லைக்குள் இருக்கும் சங்கத்தின் கள் விற்பனை நிலையங்களுக்கு கள் மாற்றம் செய்வதும் நவாலி மற்றும் வரணி வடிசாலைக்கும் யாழ்.மாவட்ட சங்கங்களுக்கும் இடையே கள், போத்தல்கள் கொண்டு செல்ல வேண்டும். எனவே ஆர்வமுடையோர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தொலைபேசியில் அல்லது நேரில் சமுகம் கொடுத்து பதிவுகளை மேற்கொண்டு வேலை செய்ய முடியும்.

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்.**

1. தே.அ.அட்டை பிரதி.
2. வதிவிடச் சான்றிதழ் (கிராம சேவகர்).
3. சாரதி அனுமதிப்பத்திரப் பிரதி.

(சி-6629)

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
**தலைவர்/பொதுமுகாமையாளர்,**
**சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**
**தொ.பே.இல-021 224 0022, 021 224 0024-தலைமைக் காரியாலயம்**
**077 020 4378 - தலைவர்.**


# கிழக்கு மாகாணத்தில் விரைவில் விமான சேவை ஆரம்பம்

## அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா



(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் விமான சேவையை உடனடியாக ஆரம்பிப்பது குறித்து சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் இரண்டு விமான நிலையங்கள் மற்றும் பல கடல் விமானங்கள் இறங்கும் தளங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளமை குறித்து அமைச்சரின் கவனத்துக்கு ஆளுநர் கொண்டுவந்ததையடுத்து விமான சேவைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதியளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர், விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர், சுற்றுலா பணியகத்தினர், விமானப்படையினர், Cinnamon Air, Fits Air மற்றும் ஏனைய தனியார் சேவையாளர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் cinnamon Air தனது விமானச் சேவையை எதிர் வரும் ஜூலை மாதத்திலிருந்து ஆரம்பிப்பதாக உறுதியளித்தது. அதை ஊக்குவிக்க கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் தனது முழுமையான ஆதரவை அளிப்பதாகத் தெரிவித்தது. (4)


## வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை
## பயணிகள் சேவைக்கான வழியனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

| இல | பாதை விபரம் | மீளளிக்க முடியாத வைப்பு | மீளளிக்கப்படக் கூடிய வைப்பு |
|---|---|---|---|
| 01 | முத்தையன்கட்டு-மாங்குளம் (ஒட்டிசுட்டான் ஊடாக) | 2,000.00 | 5,000.00 |

**கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் பின்வருமாறு:**

1. விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவங்களை 29.05.2023 ஆம் திகதி முதல் சமுர்த்தி வங்கி அருகாமை, கிளிநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலகத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 13.06.2023 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு முன்னர் பெறுகைக்குழுத் தலைவர், வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, சமுர்த்தி வங்கி அருகாமை, கிளிநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பொது முகாமையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முத்தையன்கட்டு - மாங்குளம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்வி திறத்தல் பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை,**
**வடமாகாணம்.**

(சி-6628)


# சா/த மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாதாரண தர பரீட்சையின் மீள் மதிப்பீட்டுக்கு 80,272 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் குறித்து மேலும் விசாரிக்க விரும்பினால், பரீட்சை திணைக்களத்தின் பாடசாலைகள் பரீட்சை அமைப்பு மற்றும் பெறுபேறுகளை தொடர்பு கொள்ளுமாறு அந்த திணைக்களம் அறிவித்துள்ளது. (4)


## வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு மானிப்பாயில் 3 பரப்புக் காணியுடன் 3 அறை மற்றும் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:**
**074 230 1967** (16756)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய ஆபிரிக்காவில் விபத்து 19 பேர் உயிரிழப்பு

(கேமரூனில)

மத்திய ஆப்பிரிக்கா கேமரூனில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடி அருகே டூடவாலா- எடியா சாலையில் பயணிகள் பேருந்து ஒன்று லாரி மீது பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது.

கேமரூனில் தெற்கு நகரமான எசேகா நோக்கி பேருந்து சென்றுக் கொண்டிருந்தது. அப்போது, திடீரென கட்டுப்பாட்டை இழந்த பேருந்து மணல் ஏற்றிச் செல்லும் கனரக லாரி மீது மோதியது. இந்த விபத்தில் பேருந்தில் இருந்த 19 பேர் உயிரிழந்தனர்.

பேருந்தில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்தவர்களை மீட்டு தலைநகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பேருந்து ஓட்டுனர் கவனக்குறைவாக வாகனம் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

மத்திய ஆபிரிக்க நாட்டில் அதிகளவில் சாலை விபத்துகள் நடப்பதாகவும், ஆண்டுக்கு சுமார் 1,500 பேர் விபத்துகளில் இறக்கிறார்கள் என்றும் அரசு சார்பில் கூறப்பட்டுள்ளது. (4)

# மறைந்த இங்கிலாந்து ராணி எலிசபெத்தை கொல்ல முயற்சி

## 40 ஆண்டுகளின் பின் வெளியான தகவல்

(வோஷிங்டன்)

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி தனது 96 ஆவது வயதில் மரணம் அடைந்தார். இந்த நிலையில் 1983 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட அவரை கொல்ல முயற்சி நடந்ததாக தற்போது தகவல் வெளியாகி இருக்கிறது.

இது தொடர்பாக ஆவணங்கள், அமெரிக்க மத்திய புலனாய்வு பிரிவின் இணைய தளத்தில் வெளியிட்டுள்ளன. இதில் ராணி எலிசபெத்தின் அமெரிக்க பயணம் தொடர்பாக சேமிக்கப்பட்ட கோப்புகள் வெளியிட்டு உள்ளது. 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ராணி 2 ஆம் எலிசபெத் தனது கணவர் மன்னர் பிலிப்புடன் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டார்.

அதற்கு முன்பாக சான்பிரான்சிஸ்கோ பொலிஸ் அதிகாரிகளுக்கு வந்த தொலைபேசி அழைப்பில் பேசிய நபர், வடக்கு அயர்லாந்தில் தனது மகள் ரப்பர் புல்லட்டால் கொல்லப்பட்டதாகவும் அதற்காக ராணி எலிசபெத் படகில் செல்லும் போது கோல்டன் கேட் பாலத்தில் இருந்து ஒரு பொருளை வீசி ராணிக்கு தீங்கு விளைவிக்க முயற்சிப்பேன் அல்லது யோசெமிட்டி தேசிய பூங்காவுக்கு அவர் வரும் போது கொல்ல முயற்சிப்பேன் என்று தெரிவித்தார்.

இதையடுத்து ராணி எலிசபெத் படகு அருகில் வரும்போது பாலத்தின் நடைபாதைகளை மூடுவதற்கு உளவுத்துறையால் உத்தேசிக்கப்பட்டதாக அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (4)

# உக்ரைனுடனான போர் பல ஆண்டுகள் நீடிக்கும்

## ரஷ்யா அதிர்ச்சி தகவல்

(மாஸ்கோ)

நேட்டோ அமைப்பில் சேர உக்ரைன் பெரும் முயற்சி எடுத்து வந்தது. இதனை விரும்பாத ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் சிறப்பு இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் உக்ரைன் மீது போர் தொடுத்தது.



15 மாதங்களை தாண்டியும் போர் தொடர்ந்து நடைபெற்று வருவதால் உலக பொருளாதாரத்தில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே பேச்சுவார்த்தை மூலம் போரை முடிவுக்கு கொண்டு வருமாறு உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இருப்பினும்போர் முடிவுக்கு வந்தபாடில்லை அதற்கு மாறாக இரு தரப்பினரும்ஏவுகணை தாக்குதல் உள்ளிட்ட தொடர் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வியட்நாம் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய பாதுகாப்பு கவுன்சில் துணைத்தலைவர் டிமிட்ரி மெட்வடேவிடம் உக்ரைன் போர் நிலவரம் குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்து அவர் பேசுகையில், உக்ரைன் போர் மிக நீண்ட காலத்துக்கு அதாவது பல தசாப்தங்கள் நீடிக்கலாம் என்றும், ஒருவேளை போர் நிறுத்தம் ஏற்பட்டாலும் மீண்டும் போர் தொடரலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது ரஷ்யா-உக்ரைன் போரை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி வரும் நாடுகளுக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. (4)

# போப் ஆண்டவருக்கு திடீர் உடல்நல குறைவு

(வாடிகன் சிட்டி)



போப் ஆண்டவர் பிரான்சிஸ் (வயது 86) இந்த வாரம் முழுவதும் நெருக்கமான பணி அலுவல்களை கொண்டிருந்தார். குறிப்பாக அண்மையில் இத்தாலி நாட்டு ஆயர்கள் மாநாடு, பள்ளி அறக்கட்டளை சந்திப்பு மற்றும் பல்வேறு உயர்மட்ட குழுவினருடன் ஆலோசனை என பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

இந்நிலையில் அவருக்கு நேற்று முன்தினம் திடீரென காய்ச்சல் ஏற்பட்டது. இதனால் அவர் ஓய்விலேயே இருந்தார். எனவே வழக்கமான நிகழ்ச்சிகளை அவர் ரத்து செய்துவிட்டார். இதில் முக்கியமாக, வழக்கமான மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கவில்லை. அவரது உடல் நலம் குறித்து மேலதிக தகவல் எதுவும் வெளியாகவில்லை. (4)

# ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)


ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று மதியம் 3.33 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடல் மட்டத்தில் இருந்து சுமார் 65 கிலோ மீற்றர் ஆழத்தில் உருவான இந்த நிலநடுக்கம் சுமார் 6.1 ரிக்டர் அளவில் பதிவானது என தேசிய நில அதிர்வுமையம்தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கதால் ஏற்பட்ட பாதிப்பு விவரங்கள் வெளியாகவில்லை. (4)

# மூளையில் 'சிப்' பொருத்தி கணினியுடன் இணைக்கும் சோதனை

## அமெரிக்கா அரசு அனுமதி



(வோஷிங்டன்)

உலக பணக்காரரான எலான் மஸ்க்கின் நியூராலிங்க் நிறுவனம், மனித மூளையில் "சிப்" பொருத்தி கணினியுடன் இணைத்து, நரம்பியல் தொடர்பான நோய்களுக்கு தொழில்நுட்பம் மூலம் மருத்துவ உதவிகளை வழங்க ஆய்வு நடத்தி வருகிறது.

நரம்பியல் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களும், பக்கவாதம், பார்வை குறைபாடு உள்ளவர்களும் ஸ்மார்ட் போன் கணினி போன்ற ஸ்மார்ட் டிவைஸ்களை எளிதாக பயன்படுத்தும் நோக்கத்துடன் அவர்களது மூளையில் மைக்ரோ சிப்பை பொருத்தும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

இதன் மூலம் கண் பார்வை, பக்கவாதம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்து வருகிறது.

இதில் பல கட்ட சோதனையில் குரங்குகளின் மூளையில் "சிப"பை பொருத்தி நடத்தப்பட்ட பரிசோதனை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டன.

இது தொர்பான ஆய்வறிக்கைகளை அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகத்திடம் நியூராலிங்க் நிறுவனம் சமர்ப்பித்து அடுத்த கட்டமாக மனிதர்களிடம் ஆய்வு மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டது.

இந்த நிலையில் மனித மூளையில் மைக்ரோ சிப்பை பொருத்தி சோதிக்கும் ஆய்வுக்கு அமெரிக்க அரசு அனுமதி வழங்கி உள்ளது.

இந்த ஒப்புதலுக்கு அமெரிக்க அரசிடம் நியூரா லிங்க் நிறுவனம் பலமுறை விண்ணப்பித்து இருந்தது.

ஆனால் அவைகள் ரத்து செய்யப்பட்ட நிலையில் தற்போது அனுமதி வழங்கி உள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறான். – நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவின் புதிய பாராளுமன்றத்தில் தமிழ் இனத்தின் செங்கோல்

இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டிடம் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

பிரதமர் நரேந்திர. மோடி புதிய பாராளுமன்றக் கட்டிடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

அனைத்து வசதிகளும் கொண்ட மிகப் பிரமாண்டமான இந்தியப் பாராளுமன்றம் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

இந்தியாவின் புதிய பாராளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார் என்ற செய்தியை விஞ்சி இன்னொரு நிகழ்வு பாரத தேசம் முழுவதிலும் பேசுபடு பொருளாகியுள்ளது.

ஆம், இன்று திறந்து வைக்கப்படுகின்ற புதிய பாராளுமன்றத்தில் நிறுவப்படவுள்ள செங்கோல் பற்றியதே எங்கும் பேசுபடுபொருளாகியுள்ளது.

1947இல் இந்தியா சுதந்திரமடைந்தபோது, ஆட்சிமாற்றத்தை அடையாளப்படுத்துகின்ற ஒரு கையளிப்பாக செங்கோல் வழங்கப்பட்டது.

இச் செங்கோலை தமிழ்நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீனம் செய்திருந்தது.

இந்தியாவின் முதலாவது பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் ராஜாஜியிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, ராஜாஜி அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூலம் இச்செங்கோலை செய்வித்திருந்தார்.

செங்கோல் அன்றைய இந்தியத் தேசாதிபதியாக இருந்த மவுண்பேட்டனிடம் கையளித்து அதனைத் திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் பெற்று இந்தியாவின் முதலாவது பிரதமராகப் பதவியேற்ற நேருவிடம் கையளித்தார் என்பது வரலாறு.

இங்கு தமிழ்நாட்டிலுள்ள திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் தேவாரத் திருமுறை ஓதி செங்கோலை பிரதமர் நேருவிடம் கையளித்ததன் மூலம் தமிழகத்துக்குக் கிடைத்த பெருமையைக் கடந்து, செங்கோலின் அமைப்பும் அதில் பொறிக்கப்பட்ட அடையாளங்களும் தமிழினத்தின் பெரும் புகழைப் பேசுவனவாக இருப்பதுதான் அது பேசுபடுபொருளாக இருப்பதற்கு காரணம் எனலாம்.

ஆம், சோழராட்சியை அடையாளப்படுத்துவதாக அமையப் பெற்ற செங்கோலின் முகப்பில் நீதி தேவதையாக இருக்கக்கூடிய தமிழினத்தின் அடையாளமாகிய நந்தி இடம்பெற்றுள்ளது.

தவிர, செங்கோலின் ஒரு பகுதியில் மகாலட்சுமி வீற்றிருக்கிறாள்.

ஆக, ஞானபூமியாகிய இந்திய தேசத்தின் புதிய பாராளுமன்றத்தில், நந்தியும் மகாலட்சுமியும் வீற்றிருக்கும் செங்கோல் பாரத பூமியின் ஆட்சி அடையாளமாக அமையவுள்ளது.

நேருவிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அருங்காட்சியகமொன்றில் பாதுகாக்கப்பட்டு வந்த மேற்படி செங்கோலை நேற்றைய தினம் திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் தேவாரத் திருமுறை ஓதி பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் கையளித்தார்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட செங்கோல் சபாநாயகரின் இருக்கைக்கு வலது பக்கம் நிரந்தரமாக நிறுவப்பட்டு நிமிர்ந்து நிற்கும் என்ற இந்தப் பெருமையோடு வாழ்க தமிழினம். வாழ்க தமிழ்மொழி என்று நாமும் தமிழைப் போற்றுவோம். வணங்குவோம்.

# தனியார் பல்கலைக்கழக கல்விக்கு வட்டியில்லாக் கடனுதவி திட்டம்

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழக கல்விக்கு வட்டியில்லாக் கடனுதவி வழங்குவதற்கான யோசனை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் அரச பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் வாய்ப்பை பெறத் தவறிய ஐயாயிரம் மாணவர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படவுள்ள வட்டியில்லாக் கடனுதவி தொடர்பான யோசனை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும் இந்தக் கடன் திட்டத்தின் கீழ் படிப்பதற்கு 900,000 ரூபா வட்டியில்லா கடன், நாளாந்த செலவுக்காக 300,000 ரூபாவும் கிடைக்கும் எனவும் குறித்த கல்வி நடவடிக்கை முடிந்ததும், இந்தக் கடனை வட்டி இல்லாமல் திருப்பிச் செலுத்த இன்னும் இரண்டு ஆண்டுகள் வழங்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,9)

## மூத்த இராஜதந்திர அதிகாரி ஜயந்த தனபால காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் மூத்த இராஜதந்திர அதிகாரி கலாநிதி ஜயந்த தனபால தனது 85ஆவது வயதில் நேற்று காலமானார்.

மாரடைப்பு காரணமாக நேற்று காலை 10 மணியளவில் கண்டி தேசிய வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர், வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலாநிதி. ஜயந்த தனபால அவர்கள், அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இராஜதந்திர அதிகாரியாகப் பணியாற்றினார்.

அத்துடன், ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் தூதுவராக பணியாற்றினார்.

1998ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகளின் ஆயுதக் குறைப்பு விவகாரங்களுக்கான அலுவலகத்தின் துணைச் செயலாளராகவும் அவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## அரச நிறுவனங்களில் விசேட டெங்கொழிப்பு வேலைத் திட்டம்

இலங்கையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் நேற்று முதல் 2 மணித்தியாலங்களை டெங்கு ஒழிப்புக்காக ஒதுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களும் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் டெங்கு ஒழிப்புக்காக 2 மணித்தியாலங்களை ஒதுக்க வேண்டும் என பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இவ் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் அதற்கான சுற்றறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக தெரிவித்துள்ளார்.

மேலும் நாடளாவிய ரீதியில் 61 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவு தொடர்ந்தும் டெங்கு அதி அபாய வலயங்களாக காணப்படுவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

எனவே நுளம்பு பெருக்கத்தை தடுப்பதற்கான வேலைத்திட்டங்களை அனைத்து பகுதிகளிலும் உரியவகையில் முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிரமுகர் முனையத்தில் அதி தீவிர சோதனை

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பிரமுகர் முனையத்தில் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு விசேட கவனம் செலுத்துமாறு பணிப்புரைகள் கிடைத்துள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சிடம் இருந்து இந்த அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தற்போது உரிய பரிசோதனைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விமான நிலையத்தின் பிரமுகர் முனையத்தில் மக்கள் தொடர்ந்தும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## கூரை மேல் ஏறி யாழில் சிறைக்கைதி ஒருவர் உண்ணாவிரத போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் B2 அறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சிறைச்சாலையின் கூரையில் ஏறி உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

கஸ் கார்டன் வீதி, வில்பிட்டி அக்குரஸ்ஸ மாத்தறை என்ற இடத்தை சேர்ந்த புஷ்பகுமார போல் 41 வயது உடையவரே இவ்வாறு கூரையில் ஏறி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

சிறைச்சாலைகள் ஆணையாளரின் உத்தரவுக்கமைய 12.02.2023 அன்று குருவிட்ட சிறைச்சாலையிலிருந்து யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட இவர் பல திருட்டு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்.

யாழ்.சிறைச்சாலையில் இருந்து வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரி அவர் மேற்கண்டவாறு உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். (ம-7,9)

## முன்னாள் காதலனால் மணமகள் மீது அசிட் வீச்சு

(காலி)

திருமண வைபவத்துக்கு தயாராகி கொண்டிருந்த மணமகள் மீது அசிட் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த அந்தப் பெண் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

[illegible] காலி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பெண்ணின் முன்னாள் காதலனே அசிட் வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்றும் அவரை தேடி வலைவிரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## அதிகரிக்கும் வெப்பநிலை நீரை சிக்கனமாக பயன்படுத்த அறிவுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் நீருக்கான தேவை அதிகரித்துள்ளமையினால் நுகர்வோர் தண்ணீரை கவனமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது.

நாட்டில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக மக்களின் அன்றாட நீர்த் தேவை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால் நீர் விநியோகத்தில் அவ்வப்போது அழுத்தங்கள் ஏற்படலாம் என்றும் அல்லது நீர் விநியோகம் தடைப்படலாம் என்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை குறிப்பிடுகின்றது.

எனவே நீரை சேகரித்து சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் பந்துல



(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தற்போது நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பகுதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்களை உடனடியாக மீள ஆரம்பிக்க வேண்டும் என்பதே அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ள பல வீதிகளை சீரமைக்காவிட்டால், எதிர்காலத்தில் மக்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்த முடியாது என கவுன்சிலர்களும் கருத்து தெரிவித்தனர். (4)

# மேலும் மூன்று தூதரகங்கள்

(கொழும்பு)

ஈராக், ருமேனியா மற்றும் Cyprus ஆகிய நாடுகளில் இராஜதந்திர நோக்கங்களுக்காக 'இலங்கை தூதரகங்கள் விரைவில் நியமிக்கப்பட வேண்டும் என வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

குறித்த நாடுகளில் அதிகளவான இலங்கையர்கள் இருப்பதனால் அவர்களைக் கவனித்துக் கொள்ள தூதரகங்கள் அமைப்பது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Cyprus மற்றும் ஈராக்கில் உள்ள இலங்கை தூதரகங்கள் இதற்கு முன்னதாக செயற்பட்ட நிலையில் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று நாடுகளிலும் இலங்கை தூதரகங்களை அமைப்பதன் முக்கியத்துவம் குறித்து முன்னதாக ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த தூதரகங்களை அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## கட்டுநாயக்க விமான நிலைய

# பிரமுகர் பயணிகள் முனையத்தில் அதி நவீன ஸ்கானிங் இயந்திரம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பிரமுகர் பயணிகள் முனையத்தில் அதிநவீன ஸ்கேனிங் பரிசோதனை இயந்திரங்களை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் சாதாரண பயணிகள் முனையத்தில் விமானப் பயணிகள் கொண்டு வரும் கைப்பைகளை பரிசோதிக்க உயர் தொழில்நுட்ப ஸ்கேனிங் இயந்திரங்கள் இருந்ததாகவும், ஆனால் பிரமுகர் பயணிகள் முனையத்தில் அதற்கான வசதி இல்லை எனவும் சுங்க அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சிறப்பு பயணிகள் முனையம் வழியாக வரும் பிரமுகர் கைப்பைகள் சோதனை செய்யப்படாது என அதிகாரிகள் கூறுகின்றனர்.

சிறப்பு பயணிகள் முனையங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள சிறப்பு பயணிகள் முனையங்களில் உயர் தொழில்நுட்ப ஸ்கேனிங் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, வரி செலுத்தாமல் சட்டவிரோதமான பொருட்கள் கொண்டு வருவதை தடுக்கும் வகையில் விசேட பயணிகள் மற்றும் உயரதிகாரிகள் வெளியேறும் முனையத்தில் இந்த சாதனங்களை நிறுவுமாறு ஜனாதிபதியின் செயலாளர் இலங்கை சுங்கத்திற்கு அறிவித்துள்ளார்.(4)

# தேயிலை உற்பத்தி 20 வீதம் குறைவு

(கொழும்பு)

இரசாயன உரத் தடை மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தால், 2023 இன் முதல் நான்கு மாதங்களில் இலங்கையின் தேயிலை உற்பத்தி 20 வீதம் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கடந்த மூன்றாண்டுகளில் குறைந்த அளவான 84 மில்லியன் கிலோகிராம் உற்பத்தி மாத்திரமே கிடைத்ததாக அதிகாரி ஒருவரை கோடிட்டு ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இரசாயன உரத்தடை உத்தரவு திரும்பப் பெறப்பட்ட போதிலும், போதுமான உரத்தை இறக்குமதி செய்வதற்கு சில மாதங்கள் கடந்து விட்டதாக தொழில்வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போது சந்தையில் போதுமான உரம் உள்ளது. எனினும் விலை அதிகமாக உள்ளது. 2021 இல் 1,500 ரூபாவாக இருந்த 50 கிலோகிராம் உர மூட்டை இப்போது 20,000 ரூபாவாக விற்பனையாகிறது.

ஏனைய இடுபொருள் செலவுகளும் நான்கு மடங்காக உயர்ந்துள்ளன. இவையே உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்ததாக பெருந்தோட்ட முதலாளிமார் சங்கத்தின் பேச்சாளர் ரோஷன் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

2021 ஜனவரி முதல் ஏப்ரல் வரை, இலங்கை 104.5 மில்லியன் கிலோகிராம் தேயிலையை உற்பத்திசெய்தது.

எனினும் அதே காலப்பகுதியில் இந்த ஆண்டு இந்த உற்பத்தி 84 மில்லியன் கிலோகிராமாக குறைவடைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

திருவிழாவில் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 6 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (4-33)

# சுகாதார சீர்கேட்டுடன் உணவகம் 50 ஆயிரம் அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் மாதாந்தம் உணவகங்கள், பலசரக்குக் கடைகள் என்பன பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கடந்த 10 ஆம் திகதி பரிசோதனையில் கஸ்தூரியார் வீதியில் பல்வேறு சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் யாழ்.நகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனினால் இனங்காணப்பட்டது.

இதனையடுத்து உணவக உரிமையாளரிற்கு எதிராக கடந்த 11 ஆம் திகதி மேலதிக நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றம் உணவகத்தின் சுகாதார சீர்கேடுகள் சீர்செய்யப்படும் வரை உணவகத்தினை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டது.

மேலதிக நீதிவான் நீதி மன்றில் வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு மீண்டும் எடுத்து கொள்ளப்பட்ட போது பொதுச் சுகாதார பரிசோதகரால் உணவக உரிமையாளரிற்கு எதிராக 10 குற்றச் சாட்டுகளுடன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அனைத்து குற்றச்சாட்டுகளிற்கும் உணவக உரிமையாளரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் 50,000/= தண்டம் விதித்தது.

அத்துடன் இனங்காணப்பட்ட குறைபாடுகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதையடுத்து உணவகத்தினை மீள திறப்பதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியது. (4-33)

**வேலை வாய்ப்பு**

Sales Rep முன் அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

சம்பளம், கமிசன், உணவு அனைத்தும் வழங்கப்படும். சுயவிபரக்கோவை Whats App மூலம் அனுப்பவும் (15760)

**077 473 7737**

**முன்பள்ளி ஆசிரியைக்கான பணிநிலை வேண்டுகை...**

உடுவில் பிரதேசத்தில் இயங்கிவரும் தனியார் முன்பள்ளிக்கு டிப்ளோமா கல்வித்தகைமை உடையதும் குறைந்தது மூன்று வருட கற்பித்தல் அனுபவம் உடைய ஆசிரியை தேவை. தகுதி உடையோர் தொடர்பு கொள்ளவும்.

**077 760 6607.** (15761)

**Future stars school**

பாலர் பாடசாலை மற்றும் மாலை நேர வகுப்புக்கள்

3+ இலிருந்து தரம் 05 வரையான மாணவர்களுக்கு நடைபெறுகின்றன



இடம்
கோவில் வீதி நல்லூர் யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு
0771392130 || 0768817694 (#-6630)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்குள்...

தேடுதல் நடத்தியதில் வீட்டுக்கு அருகே இருந்த பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் இருந்து சிறுமி மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்த போதிலும் சிறுமி ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த ச.சிம்சிகா என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார். (ம-7,9,30,60)

## லான்ட்மாஸ்டரின்...

புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த றிவ்விகா (வயது - 4) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

சம்பவம் குறித்து தெரியவருகையில், புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் வசிக்கும் குறித்த சிறுமி பாடசாலை முடித்து நேற்று முன்தினம் மதியம் வீடு வந்தபோது அயல் வீட்டுகாரர் தனது விறகுடன் நின்ற லான்ட்மாஸ்டரை பின்னோக்கி எடுக்க முற்பட்டுள்ளார்.

இதனை கண்ட சிறுமி ஓடிவந்து லான்ட்மாஸ்டரின் பின்பக்கம் நின்றுள்ளார். சிறுமி நின்றது அறியாமல் குறித்த நபர் லான்ட்மாஸ்டரை பின்னோக்கி எடுத்துள்ளார்.

இதன்போது லான்ட்மாஸ்டரின் சில்லுக்குள் அகப்பட்டு சிறுமி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9)

## கப் ரக வாகனம்...

சம்பவித்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சீனியர் சந்திரகாந்தன் என்பவரே உயிரிழந்தவராவார்.

இதன்போது இன்னொருவர் மீதும் குறித்த வாகனம் மோதி அவர் படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்தினை ஏற்படுத்தியவர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் அச்சுவேலி பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சடலத்தின் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,9,33,104)

## சகோதரி...

மணி ஒருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வந்த நிலையில் வெள்ளிக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் வைத்தியசாலையில் உயிரிழந்த தனது சகோதரியை பார்வையிடுவதற்காக மேற்படி முதியவர் நுணாவிலில் இருந்து துவிச்சக்கர வண்டியில் வந்து பார்வையிட்ட பின்னர், உயிரிழந்த சகோதரி வீடு நோக்கி துவிச்சக்கரவண்டியில் பயணித்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை அண்மித்து ஏ9 வீதியில் பின்புறமாக வந்த கார் மோதி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் நுணாவில் மத்தி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 70 வயதான கந்தசாமி கமலநாதன் என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்தினை ஏற்படுத்திய கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(ம-7,9,30)

## புதிய பாராளு...

இந்நிலையில் வெள்ளியால் செய்யப்பட்டு தங்கமுலாம் பூசப்பட்டுள்ள செங்கோல் திருவாவடுதுறை ஆதீனத்தால் பிரதமர் மோடியிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

செங்கோலினை பிரதமரிடம் கையளிக்கும் வேளையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய கோளறுப்பதிகத்தின் முதல் தேவாரமாகிய "வேயுறு தோழிபங்கன்" எனத் தொடங்கும் தேவாரப் பதிகம் பாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சபாநாயகரின் இருக் கைக்கு அருகில் இந்த செங்கோல் நிறுவப்படவுள்ளது. (ம-7,9)

## வனவளத்...

வனவளத் துறையால் தயாரிக்கப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் நல்லூர், சாவகச்சேரி, வேலணை, மருதங்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் புதிதாக வனப் பிரதேசங்களினை அறிவிக்கும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடல் அரிப்பைத் தடுத்தல், இயற்கை வளங்கள் பேணல் எனும் போர்வையில் கண்டல் நிலத் தாவரங்கள் நடப்பட்ட இடங்கள், அவை வளர்ந்து நிற்கும் இடங்கள் அனைத்தும் வனவளத் திணைக்களத்துக்கு உரியதாக பிரகடனப்படுத்தும் முயற்சிகளே தற்சமயம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் இவ்வாறு புதிதாக வனங்களாக அறிவிக்கப்பட்டு வனவளத் திணைக்களத்தால் உரிமை கோரப்படவுள்ள பிரதேசங்கள் 800 ஹெக்டேயர் அல்லது 2400 ஏக்கர் பரப்பளவானது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7,9)

## அதிகரி...

றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அதிக வெப்ப நிலை கிடைக் கும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த இடங்களில் வெப்பச் சுட்டெண், மனித உடலில் உணரப்படும் வெப்ப நிலையை விட அதிகரிக் கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், பொதுமக்கள் வெளியக நடமாட்டத்தை குறைத்துக் கொள்ளமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ம-7,9)

## கடன்...

விரும்புவதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதில் அனைவரும் இணைய வேண்டும் எனத் தாங்கள் முன்மொழிவதாக ஜனாதிபதி கூறியுள்ளதுடன், சீனாவும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க வேண்டும் என வலியுறுத்தியதாகவும் ஜப்பானிய ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (ம-7,9)

## சட்ட...

தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்த பொது நலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்து பசுபிக் வலயத்தின் பணிப்பாளர் மற்றும் இந்தியாவின் பணிப்பாளர் பென் மெலர் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஆகியோருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பு கடந்த வெள்ளிக் கிழமை மாலை பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது. நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் இச்சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் பிரித்தானியாவுக்கு குடிபெயரும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1582
வெற்றி இலக்கங்கள்: கடகம் 0 4 1 7 9 7

தன நிதானய
திகதி - 2023.05.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1157
W 39 52 64 78

கொவிசெத
திகதி 2023.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 3369
S 06 23 27 72

மெகா பவர்
திகதி 27/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1475
U 19 04 24 49 78

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.27
சீட்டிழுப்பு இலக்கம் 436
மேஷம் 12 24 26 59 மேஷம்

மஹஜன சம்பத
திகதி 2023/05/27
சீட்டிழுப்பு இலக்கம் 5127
K 9 6 6 8 4 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2101
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.05.27
தினம் சனிக்கிழமை
M 27 57 60 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,388,500/-

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.27
வெற்றி வாரம்: 4262
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,958,159.40
14 27 51 68 H

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,548,637.80
திகதி 2023-05-27
வெற்றி வாரம் 3813
வர்ணம் இள நீலம்
10 31 44 54
ரூ. 9,945,540/-

B 03 36 38 63 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 333,190,004.20
1277
சிவப்பு
2023.05.27
சனிக்கிழமை

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 597
திகதி 2023-05-27
வர்ணம் ஆரஞ்சு நிறம்
L 18 49 59 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,205,332.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 548/47
Web: www.dlb.lk

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 1927
ரூ. 50,234,348.20
சீட்டிழுப்பு திகதி: 2023.05.27
19 28 57 62 H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**கைதடி A9 வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பக்க பாதை.
- கட்டட அனுமதி உண்டு.
- ஆவணங்கள் அனைத்தும் நேர்த்தியானவை.
- அனைத்து தேவைக்கும் ஏற்ற காணி.

(15742)

**077 082 1010, 077 441 0919**

## காணி விற்பனைக்கு

**யாழ் நகரில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

வாங்குவோர் நேரடித் தொடர்பு கொள்ளவும்.

**ராஜா சொத்து விற்பனை நிலையம்**

(C-6633)

**077 603 3259**

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு சந்திக்கு அண்மையில் தென்னை, பனை உடன் உள்ள காணி விற்பனைக்குண்டு.

(15740)

**077 172 1074**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(15738)

**077 638 5683**
**076 755 8606**

## சமையல் வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையலாட்கள் (கொத்து,ரைஸ்), உதவி ஆட்கள் உடன்தேவை. (ஆண் / பெண்) தங்குமிடவசதி உண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

(15751)

**077 629 0894**
**072 629 0891**

## வகுப்புக்கள்

க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான பௌதிகவியல், இரசாயனவியல் பாடங்களிற்கான பிரத்தியேகமான வகுப்புகள் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.

(15752)

**076 547 5278**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த, 1988 அவிட்டம் (4ஆம் பாதம்), கிரக பாவம் 53, செவ்வாய் குற்றமற்ற HND எஞ்சினியரிங் படித்து தனியார், தொழில் புரியும் மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

(15750)

**077 311 6279**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இளவாலையில் 36 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- இளவாலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- இளவாலை சந்தியில் இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள்,சுற்றுலா விடுதிகள், வீடுகள்
- அமைக்க உகந்த இடம்.
- பரப்பு ஒன்றின் விலை 800,000 (எட்டு இலட்சம்)

(15738)

**076 165 3129**
**076 911 9371**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

எல அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS (C-6632)

**0777-068-777**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • பருத்தித்துறை • நெல்லியடி • மன்னார் • திருகோணமலை • கல்லேட்டுத்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

(C-6631)

**0777-068-777**
v2vacancies@gmail.com

## ஸ்ரீலங்கா சென்.ஜோன் அம்புலன்ஸ் தலைமையகத்தின் யாழ். மாவட்ட மக்களுக்கான அறிவித்தல்

1. கடந்த 27 வருடங்களுக்கு மேலாக சென்.ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட ஆணையாளராக சேவையாற்றிய திரு.செ.செல்வரஞ்சன் அவர்கள் கடந்த 28.02.2023 இல் அப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்து திரு.எட்வேட் டிலிஷான் அவர்கள் 01.03.2023 இல் இருந்து யாழ். மாவட்ட ஆணையாளராக எம்மால் நியமிக்கப்பட்டுள்ளார்.
2. திரு.எட்வேட் டிலிஷான் அவர்கள் தலைமையிலான குழுவினர் சென்.ஜோன் அம்புலன்சினால் யாழ். மாவட்ட மக்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்ட அனைத்து சேவைகளையும் எதுவித தங்கு தடையுமின்றி எமது வழிகாட்டலின் கீழ் மிகச்சிறப்பாக வழங்க உள்ளார்கள். இவர்களுக்கு சகல வழிகளிலும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு நாம் யாழ் மாவட்ட மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.
3. புதிய நிர்வாகத்தின் சகல நிதி நடவடிக்கைகளையும் எமது தலைமையகம் ஒழுங்காக கணக்காய்வு செய்து நிதி நிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கும் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.
4. யாழ். மாவட்டத்தில் முதலுதவிசேவையினையும், முதலுதவி வகுப்புக்களையும் எமது தலைமையகத்தால் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட முதலுதவி பயிற்று விப்பாளர்கள் எமது நெறிப்படுத்தலின் கீழ் தொடர்ந்தும் மேற்கொள்வார்கள் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**டாக்டர் ஜே.எம்.நிலாம்,**
**குழந்தை வைத்திய நிபுணர்,**
**சிறுவர் வைத்தியசாலை, பெரதெனியா,**
**பிரதம ஆணையாளர்,**
**சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணி,**
**ஸ்ரீலங்கா. 076 137 8494**

(15755)

**வடமாகாணத்தில் முதலுதவி வகுப்புக்களை ஒழுங்குபடுத்துவதற்கும், அம்புலன்ஸ் (நோயாளர் காவு வண்டி) சேவையினையும், யாழ்.நகரில் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் நடாத்துவதற்கான மண்டப வசதியையும் பெற்றுக் கொள்வதற்கு தொடர்புகொள்ள வேண்டிய தொ.பே. இலக்கங்கள்:**

**071 019 9199, 021 321 4444, 076 140 8366**

## கல்யாண மாலை

### (சர்வதேச இலவச திருமண சேவை)

### அறிவித்தல்

**அன்பார்ந்த பொது மக்களுக்கு!**

யாழ்ப்பாணம் இலக்கம் 144, பிறவுண் வீதியிலுள்ள கல்யாண மாலை என்பது சமூக சேவை நோக்குடன் இயங்கும் சர்வதேச இலவச திருமண சேவை அமைப்பாகும்.

இங்கு நிலைய நிர்வாகச் செலவுகளின் பொருட்டு பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நிலைய நிர்வாகச் செலவு, காகிதாதிகள், தொலைபேசி மற்றும் மின் கட்டணங்கள் அதிகரித்து இருப்பதன் காரணமாக எதிர்வரும் **01.06.2023** இலிருந்து பதிவுக் கட்டணம் **நான்காயிரம்** ரூபாவாக **(4,000/-)** அறவிடப்படும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**நிர்வாகம்**
**கல்யாண மாலை**


www.edus.lk

EDUS | Online Institute — LIVE

Professional Certificate Courses & IELTS

June 2023 Intake



தமிழ் மொழி மூலம் ஒன்லைன் தொழில்சார் கல்வித் தகைமைகள்..!

HERRY UP!

P.C in English | P.C in I.T | P.C in Sinhala

IELTS PREP. & COACHING

- Placement Test
- 12 / 24 / 36 & 48 Sessions
- 4 / 8 / 12 / 16 Weeks
- Prep. Materials
- Mock Examinations
- Qualified Lecture Panel
- Individual Attention
- Extensive support till exam.

EXCLUSIVELY OFFERED BY : EDUS ONLINE INSTITUTE JAFFNA & COLOMBO

Registrations Last Date: WEDNESDAY 31 May 2023

TALK TO US
0777 123 330
www.edus.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.